# இன்றைய வேளாண் செய்திகள்

## 05.07.2013

### விவசாய நிலங்களை அரசு கையகப்படுத்தக் கூடாது

வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் விவசாய நிலங்களை அரசு கையகப்படுத்தக் கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு வலியுறுத்தினார்.

பன்னாட்டு நிறுவனங்கள் உள்பட பல்வேறு தனியார்களுக்கு வழங்குவதற்காக விவசாய நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்படுவதாகக் கூறி, தமிழக நில உரிமைக் கூட்டமைப்பு சார்பில் திருவள்ளூரில் புதன்கிழமை கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு கூட்டமைப்பின் தலைவர் நிக்கோலஸ் தலைமை வகித்தார். தலித் மண்ணுரிமைக் கூட்டமைப்பின் தலைவர் காளிரத்தினம் முன்னிலை வகித்தார். தமிழ் மக்கள் முன்னணித் தலைவர் திருநாவுக்கரசு வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்தத் தலைவர் ஆர்.நல்லகண்ணு பங்கேற்று பேசியதாவது:

கும்மிடிப்பூண்டியை அடுத்த தேர்வாய் ஊராட்சியில் 1,200 ஏக்கர் சமூகக் காடுகள் அழிக்கப்பட்டு, 7 தனியார் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன. இதனால் தேர்வாய், செங்கரை, கண்ணன் கோட்டை, பாலவாக்கம், கரடிபுத்தூர், ஜே.ஜே.நகர், அன்னாவரம், முக்கரம்பாக்கம், சூளைமேனி, ஜி.ஆர்.கண்டிகை, சிறுவாடா ஆகிய கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

தற்போது அரசு தரப்பில், சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் இயற்கை வளம் நிறைந்த நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் சிறப்புப் பொருளாதார மண்டல விதியின் படி, விளைநிலங்களை எக்காரணத்தைக் கொண்டும் கையகப்படுத்தக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விதிகளை மீறி அதிகாரிகள் செயல்படுவது வேதனைக்குரிய விஷயமாகும்.

இம்மாவட்டத்தில் பெருநகரம், துணை நகரம், பசுமை விமானத்தளம், சரக்குப் பெட்டக முனையம், இணைப்புச்சாலை என பல்வேறு வழிகளில் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, விவசாய நிலங்களை கையகப்படுத்தும் செயலை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

நிர்வாகிகள், எழிலரசன், ஆதிசேஷன், வாணிதாசன், அரங்க குணசேகரன் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். கவுதம் நன்றிக் கூறினார்.

### கண்டலேறு தண்ணீர் நாளை வந்து சேரும்?

ஆந்திரத்தில் இருந்து திறந்து விடப்பட்ட கண்டலேறு தண்ணீர் தமிழக எல்லைக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தமிழக எல்லையான ஜீரோ பாய்ன்ட் பகுதிக்கு சனிக்கிழமை வந்தடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 200 கன அடி வீதம், திங்கள்கிழமை மாலை தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் ஜீரோ பாய்ன்டுக்கு முதலில் 10 கன அடியாகவும் அதைத் தொடர்ந்து படிப்படியாக நீரின் அளவு அதிகரிக்கும். அந்த தண்ணீர் ஜீரோ பாய்ண்டுக்கு வியாழக்கிழமை மாலை அல்லது நள்ளிரவில் வந்து சேரும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனர்.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி, 152 கிலோ மீட்டர் தூரமுள்ள நீர்வழிப்பாதையில் 80 கிலோ மீட்டர் தூரமே தண்ணீர் வந்துள்ளது. தண்ணீர் வரும் வேகத்தை வைத்து கணக்கிட்டால், சனிக்கிழமை காலை அல்லது மாலையில்தான் தமிழக எல்லையான ஜீரோ பாய்ன்டுக்கு தண்ணீர் வந்து சேரும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் தண்ணீர் வரும் தெலுங்கு கங்கை கால்வாய் கடந்த பல மாதங்களாக காய்ந்து கிடத்தால், நீர் வருவது தாமதம் ஏற்பட்டுள்ளது.

சனிக்கிழமை ஜீரோ பாய்ன்ட்டை தண்ணீர் வந்தடைந்தால் அங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை பூண்டி ஏரியை தண்ணீர் வந்தடையும் என்றார்.

## 100 சதவிகித மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம்

சிறு, குறு விவசாயிகளுக்கு தோட்டங்களில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 100 சதம் மானியம் வழங்கப்படும் என மதுரை மேற்கு தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் த. காமராஜ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மா, வாழை, கொய்யா, எலுமிச்சை, தென்னை, காய்கறிகள், கரும்பு, மூலிகைப் பண்ணை உள்பட அனைத்து தோட்டப் பயிர்களுக்கும் சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள் அமைக்க மத்திய அரசு மானியத்துடன் தமிழக அரசு கூடுதல் மானியம் அளிக்கிறது.

நஞ்சை நிலமாக இருந்தால் இரண்டரை ஏக்கருக்கும், புன்செய் நிலமாக இருந்தால் ஐந்து ஏக்கர் வரையிலும் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினி சிட்டா, நிலத்தில் உள்ள பயிர் அடங்கல், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டு, நிலத்தின் வரைபடம் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பத்தை மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

மதுரை மாவட்டத்தில் சொட்டு நீர்ப் பாசன அமைப்பை அமைத்துத்தர 10 நிறுவனங்களை அரசு அங்கீகரித்துள்ளது. விவசாயிகள் தாங்கள் விரும்பும் நிறுவனத்தில் கருவிகளை வாங்கிக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கைப்பேசி எண் 9865280167-ல் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## சோலையாறில் 94 மி.மீ. மழை

சோலையாறு அணைப்பகுதியில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 94 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்):

பரம்பிக்குளம் 87, ஆழியாறு 10.6, திருமூர்த்தி 4, அமராவதி 3, தூணக்கடவு 18, பெருவாரிப்பள்ளம் 21, அப்பர் நீராறு 28, லோயர் நீராறு 29, அப்பர் ஆழியாறு 3, காடம்பாறை 3, சர்க்கார்பதி 22, வால்பாறை 46, வேட்டைக்காரன்புதூர் 12.8,

மாக்கினாம்பட்டி 6.6, மணக்கடவு 27.8, நல்லாறு 1, சின்கோனா 65, பொள்ளாச்சி 10, கோவை தெற்கு 2.

**வேளாண் விரிவாக்கத்துக்கு தகவல் தொழில்நுட்பம் அவசியம்**

இந்தியாவின் எதிர்கால உணவுத் தேவையைக் கருத்தில் கொண்டு வேளாண் விரிவாக்கத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் புகுத்துவது அவசியம் என்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி பேசினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் சார்பில், "வேளாண் விரிவாக்கத்தில் தகவல் தொடர்பு,  தொழில்நுட்பத்தின் பங்கு' என்ற தலைப்பில், கோடைக்கால சிறப்புப் பயிற்சி முகாம் பல்கலைக்கழக வளாகத்தில் ஜுலை 3 முதல் 23-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. அதன் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி இப் பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

இந்தியாவின் எதிர்கால உணவுத் தேவையைக் கருத்தில் கொண்டு வேளாண் விரிவாக்கத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் புகுத்துவது அவசியமாக உள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் தெரு நாடகங்கள் நடத்தியதன் பயனாக, வேளாண் உற்பத்தித் திறன் 18 சதவிகித அளவுக்கு உயர்ந்துள்ளது. பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் மற்றும் அதிநவீன தகவல் தொடர்பு தொழில்நுட்ப உபகரணங்கள் மூலமாக, வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு சிறந்த முறையில் எடுத்துச் சென்று, அதன் வாயிலாக அறிவியல் ரீதியான வேளாண்மையை வளர்க்க இயலும்.

தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த விரிவாக்கப் பணிகளை தமிழ்நாட்டில் நான்கு மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அனைத்து விரிவாக்க அலுவலர்களுக்கும் புவியிட உணர் அமைப்பு (ஜிபிஎஸ்) கொண்ட கைக்கணினி (டேப்லட்) வழங்கப்பட உள்ளது. இதைக் கொண்டு விரிவாக்க அலுவலர்கள் பயிர்களின் வளர்ச்சி பற்றிய தகவல்களை விஞ்ஞானிகளுக்கு அனுப்பி வைப்பார்கள் என்றார்.

ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை மைய இயக்குனர் செந்தில் விநாயகம் பேசுகையில், தற்போது விவசாயிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் விகிதாச்சாரத்தின் இடைவெளி அதிகரித்து வருகிறது.

இத் திட்டங்கள் மூலமாக விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகளின் தேவைகளை விரைவாகவும், சிறந்த முறையிலும் அறிந்துகொள்ள முடியும் என்றார்.

தொடர்ந்து மத்திய ஊரக வேளாண் மேம்பாட்டு பயிற்சி இயக்குனர் எம்.சின்னதுரை, பயிற்சி முகாமின் இயக்குனர் மற்றும் வேளாண் விரிவாக்கத் துறையின் பேராசிரியர் தியோடர் ரவிகுமார் ஆகியோர் பேசினர்.தமிழகம், கேரளா, ஆந்திரா உள்ளிட்ட 11 மாநிலங்களைச் சேர்ந்த 25 வேளாண் விஞ்ஞானிகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வை மக்கள் இயக்கமாக நடத்த வேண்டும்**

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வை மக்கள் இயக்கமாக ஊராட்சி மன்றத் தலைவர்கள் நடத்த வேண்டுமென வேலூர் மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர் அறிவுறுத்தியுள்ளார்.

மழைநீர் சேகரிப்பு குறித்து ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் வேலூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

முகாமை தொடங்கிவைத்து ஆட்சியர் பேசியது: நீரின்றி யாரும் உயிர் வாழ முடியாது. நம்முடைய உடலில் 60 சதவீதம் நீர்ச்சத்து உள்ளது. ரத்தத்தில் 90 சதவீதம் நீர் உள்ளது. நாம் உண்ணும் உணவில் 15 சதவீதம் நீர் உள்ளது. உடல் கழிவுகளை வெளியேற்ற தண்ணீர் அவசியம்.

வேலூர் மாவட்டத்தில் நீர் சேமிப்பு குறைவாக உள்ளது. போதுமான அளவுக்குத் தண்ணீர் இல்லை. அதற்கு வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டதே காரணம். வேலூர் மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் 15 ஒன்றியங்கள் 100 சதவீத தண்ணீரை எடுத்துக் கொள்கின்றன. நெமிலி, திமிரி ஆகிய ஒன்றியங்கள் 90 சதவீத தண்ணீரையும், வாலாஜா ஒன்றியம் 80 சதவீத தண்ணீரை எடுத்துக் கொள்கின்றன.

2005, 2007, 2010 ஆகிய ஆண்டுகளைத் தவிர கடந்த 10 ஆண்டுகளில் மழை குறைந்து விட்டது. ஆகவே நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த குளம், குட்டைகள், பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டன. ஆனால் தற்போது அவை குப்பை கொட்டுமிடங்களாக மாறி வருகின்றன. மேலும் நகரத்தை போல கிராமங்களிலும் சாலைகள் சிமென்ட் சாலைகளாக மாறி வருகின்றன. அதனால் நிலத்தில் தண்ணீர் தேங்குவதேயில்லை.

மழை நீர் சேகரிப்புத் திட்டத்துக்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்கியுள்ளது. அதனைப் பயன்படுத்தி மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி மழைநீரை சேகரிக்க செய்ய வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

முகாமில் நிர்வாகப் பொறியாளர் நாராயணசாமி, துணை நிலநீர் வல்லுநர் ஜனகராஜ், உதவி நிலநீர் வல்லுநர் எஸ்.ராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) சரவணன், உதவிப் பொறியாளர்கள் உதயகுமார், தனசேகர், மோகன், சேகர் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஒன்றியங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## நடப்பாண்டில் 1000 ஹெக்டேரில் சொட்டுநீர்ப் பாசனம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 1000 ஹெக்டேரில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஜெகந்நாதன் கூறினார்.

திருவண்ணாமலை மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கான சொட்டு நீர்ப் பாசன சிறப்பு முகாம் திருவண்ணாமலை வேங்கிக்கால் வணிக வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி தலைமை தாங்கினார். இதில் எஸ்.ஜெகந்நாதன் பேசியது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் சென்ற ஆண்டு 500 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 497 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்பட்டது. இந்த ஆண்டு 1000 ஹெக்டேரில் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கையும் எட்டி விடுவோம்.

சிறு, குறு விவசாயிகளுக்கு முழுவதும் இலவசமாக சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் அமைத்துத் தரப்படுகிறது. பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்துடன் அமைத்துத் தரப்படுகிறது.

இம்முகாமில் முன்னுரிமை அடிப்படையில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து தர 60 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

முகாமில் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கே.சந்திரன், ஜெயின் சொட்டு நீர் பாசன நிறுவனப் பிரதிநிதி தேவராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்லில் நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு வரப்பெற்றிருந்த பருத்தி மூட்டைகள்.**

நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ஆயிரம் மூட்டை பருத்திகள் ரூ.18 லட்சத்துக்கு விற்பனையாகின.

வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெற்ற இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல் மட்டுமின்றி அருகே சேலம், துறையூர், தொட்டியம் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் விவசாயிகள் பருத்தி மூட்டைகள் கொண்டு வருகின்றனர்.

இதன்படி, இந்த வாரம் வியாழக்கிழமை (ஜூலை 4) நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1000 மூட்டை பருத்திகள் வரப்பெற்றிருந்தன. அவற்றில் ஆர்சிஹெச் ரக பருத்திகள் குவிண்டால் ரூ.4800 முதல் ரூ.5351 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4850 முதல் ரூ.5500 வரையும், சுரபி ரக்ம ரூ.5500 முதல் ரூ.6035 வரையும் ஏலம் போயின. அதன்படி, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.18 லட்சத்துக்கு விற்பனையானதாக கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் ஜூன் 27ஆம் தேதி நடைபெற்ற ஏலத்துக்கு வரப்பெற்ற 600 மூட்டை பருத்திகள் ரூ.11 லட்சத்துக்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

**நூறு சதவீத மானியத்தில் பசுந்தீவன உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

நூறு சதவீத மானியத்திட்டத்தின் கீழ் பசுந்தீவனம் உற்பத்தி செய்திட தகுதியுடைய நாமக்கல் மாவட்ட கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் வெளியிட்டுள்ள செய்தி:

பசுந்தீவன உற்பத்தியை பெருக்கும் நோக்கில் மாநில பசுந்தீவன உற்பத்தித் தி0ட்டத்தை தமிழக அரசு நிகழ் நிதியாண்டில் செயல்படுத்த உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பல்லாண்டு தீவன பயிர்களான கோ-3 மற்றும் கோ-4 ஆகியவை பயிரிடும் வி0வசாயிகளுக்கு கால் (0.25) ஏக்கருக்கு நூறு சதவீத மானியமாக ரூ.3000 வழங்கப்பட உள்ளது. தவிர, இந்த திட்டத்தி0ல் கால்நடை வளர்க்கும் வி0வசாயிகளுக்கு அதிகபட்சம் ஒரு ஏக்கர் வரை மானியம் வழங்கப்பட உள்ளது.

நாமக்கல் மாவட்டத்துக்கு இத்திட்டத்தின்கீழ் 900 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 2 கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் இந்த திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். ஏற்கனவே, கடந்த இரு ஆண்டுகளில் பயனடைந்தவர்கள் மீண்டும் பயன்பெற முடியாது.

மேலும், இத்திட்டத்தி0ன்கீழ் ஏற்கனவே தீவன பயிர்கள் வளர்க்கும் விவசாயிகளுக்கு நீர்தெளிப்பான் கருவி 75 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது. இந்த மானியத்தில் நீர்தெளிப்பான் கருவி பெற விவசாயிகள் ஒரு ஏக்கரில் தீவன பயிர் பயிரிட்டு பராமரிப்பு செய்துவர வேண்டும். இந்த திட்டத்தின்கீழ் நாமக்கல் மாவட்டத்துக்கு 200 நீர்தெளிப்பான் கருவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மானியத்தில் புல்வெட்டும் இயந்திரம் பெற்றவர்கள் இந்த திட்டத்தை பயன்படுத்திட முடியாது.

இவ்விரு மானியங்களை பெற விரும்பும் கால்நடை வளர்ப்பு விவசாயிகள் அருகே உள்ள கால்நடை மருந்தகத்தி0ல் தங்களது பெயரை பதிவு செய்திட வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காடுகள் அழிப்பே வறட்சிக்கு காரணம்'

காடுகளில் மரங்களை வெட்டியதால்தான் மழை வளம் குறைந்து, மண்வளம் கெட்டு வறட்சி  ஏற்பட்டது என்றார் பொறியாளர் சாமிநாதன்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், செயின்ட் ஜோசப் பாலிடெக்னிக் கல்லூரியில் "வறட்சியை வளமாக்குவோம்' எனும் தலைப்பிலான கருத்தரங்கம் அண்மையில்  நடைபெற்றது. கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பாலமுருகன்  தலைமை வகித்தார்.

கல்வி நிறுவன இணைச் செயலர் கிருபாகரன் முன்னிலையில், சிவில் துறை தலைவர் சாமிநாதன் "வறட்சியை போக்கி வளமாக்குவோம்' எனும் தலைப்பில் பேசியது:

காலங்காலமாக விவசாயம் சார்ந்த தொழிலை மட்டுமே நம்பியுள்ள நமது தேசம் இன்று பெரும் வறட்சியை சந்தித்து வரும் நிலையை மாற்ற அனைவருமே வேளாண் சார்ந்த தொழிலில் ஈடுபடவேண்டும். குறிப்பாக நவீன தொழில்நுட்ப உலகில் மாறி வரும் கால நிலைகளுக்கேற்ப மண்வளத்தையும், மழைவளத்தையும்

பெருக்க போதிய உத்திகளை கையாள வேண்டும். இன்றைய இளைஞர்கள் பெரும்பாலானோர் பொறியாளர்களாக முன்னணி நிறுவனங்களில் பணிபுரியவே விரும்புகின்றனர். வேளாண் தொழில் செய்து நமது எதிர்கால சந்ததிகளுக்கு வாழ்வளிக்க முன்வரவில்லை. காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதும், ஆழ்குழாய் கிணறுகளால் பூமி துளையிடப்படுவதும், அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படுவதுமே மழைவளம் குன்றியதற்கும், மண்வளம் கெட்டதற்கும் மூல காரணமாகும். நமது முன்னோர்கள் இயற்கை சார்ந்த சூழலில் வாழ்ந்தபோது எவ்வித நோய்களுக்கும் ஆட்படாமல் பல காலம் வாழ்ந்தார்கள். ஆனால், இன்றோ அது முழுவதும் மாறி அறிவியல் வளர்ச்சி என்ற பெயரில் பல்வேறு நோய்களால் இன்னல்களை சந்தித்து வருவதுடன், பசுமையான சூழலை இழந்து வறட்சியால் வாடுகிற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்நிலை மாறி வளமாக இனிமேலும் நிலங்களை தரிசாக்காமல் இயன்றவரை ஏதேனும் ஒரு விவசாயம் சார்ந்த தொழில் செய்து நாம் வாழ்வதோடு இந்த தேசத்தையும் வாழ வைப்போம் என்ற உறுதியை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

முன்னதாக, திட்ட அலுவலர் ரஞ்சித்குமார் வரவேற்றார். மாணவர் கணேசன் நன்றி கூறினார். இதில், அனைத்துத்துறை மாணவர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

**வறுமையில் வாடுவோர் எண்ணிக்கை பாதியாகக் குறைந்தது**

கடந்த 13 ஆண்டுகளில் சர்வதேச அளவில் வறுமையில் வாடுவோர் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா. உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட உலக நாடுகளின் தலைவர்கள், ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்கை நிர்ணயிக்க ஒப்புக் கொண்டனர். இந்த இலக்கை 2015ஆம் ஆண்டுக்குள் எட்டுவது என முடிவு செய்யப்பட்டது.

வறுமை ஒழிப்பு, கல்வி மேம்பாடு, பாலின சமத்துவம், தாய், சேய் நலம், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை, எய்ட்ஸ் மற்றும் மலேரியா கட்டுப்பாடு மற்றும்

வளர்ச்சிக்கான சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஆயிரமாண்டு இலக்கு தொடர்பாக இந்த ஆண்டுக்கான அறிக்கையை ஐ.நா. வெளியிட்டுள்ளது.

இந்த இலக்குகளில் சில முழுமையாக எட்டப்பட்டுள்ளன. அதை அடைவதற்காக அரசு, சமுதாயம் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் எந்த வகையில் உதவின என்பது குறித்து இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இன்னமும் எட்டப்படாமல் உள்ள சில இலக்குகளை அடைவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல் மற்றும் 200 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட சில இலக்கு ஏற்கெனவே எட்டப்பட்டுள்ளன. 2010 நிலவரப்படி 70 கோடி பேர் மட்டுமே வறுமையில் உள்ளனர். இது 1990இல் இருந்த அளவில் பாதிதான். மலேரியா, காச நோய் ஆகியவற்றால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்தல், எய்ட்ஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் உள்பட சுகாதாரத் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைய தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2015ஆம் ஆண்டுக்குள் இலக்கை எட்ட முடியும்.

கடந்த 2000 முதல் 2010ஆம் ஆண்டுக்குள் மலேரியா நோய்க்கு உயிரிழப்போர் எண்ணிக்கை 25 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. 1.1 லட்சம் பேர் இந்த நோயிலிருந்து விடுபட்டுள்ளனர்.

கடந்த 1995 மற்றும் 2011க்கு இடைப்பட்ட காலத்தில் 5.1 கோடி காச நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 2 கோடி உயிர்

காப்பாற்றப்பட்டுள்ளது. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 3.4 கோடியிலிருந்து 80 லட்சமாகக் குறைந்துள்ளது. 2000 முதல் 2010 வரையிலான காலத்தில் குடிசைகளில் வசிக்கும் 20 கோடி பேர் சுத்தமான குடிநீர், கழிப்பிட வசதி, போதுமான தங்குமிட வசதி பெற்றுள்ளனர். இது 10 கோடி என்ற இலக்கைப்போல 100 சதவீதம் அதிகம் ஆகும்.

தாய்}சேய் நலம், அனைவருக்கு கல்வி, கழிப்பிட வசதி மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றில் இலக்கு எட்டப்படவில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து பான் கி மூன் கூறுகையில், ""ஒரு சில இலக்குகள் இன்னும் எட்டப்படவில்லை.

எனினும், அவை எட்டக்கூடிய தூரத்தில் தான் உள்ளன. இதற்காக தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டியது அவசியம்'' என்றார்.

**"உணவுப் பாதுகாப்பு சட்டம் பல நாடுகளையும் கவரும்'**

இந்தியாவில் கொண்டுவரப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்புச் சட்டம் உலக முக்கியத்துவம் வாய்ந்தது. இது பல நாடுகளையும் கவரும். அந்நாடுகள் இதுபோன்ற சட்டத்தை இயற்ற வாய்ப்புகள் உள்ளன என்று ஐ.நா.சபை அதிகாரி வியாழக்கிழமை தெரிவித்தார்.

மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமப்ஸ ஐ.நா.சபையின் உணவுக்கான உரிமைகள் பிரிவின் சிறப்பு அதிகாரி ஆலிவர் டி ஸ்கட்டர் வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார். பின்னர் அவர் அளித்த பேட்டி:

இந்தியாவின் உணவு பாதுகாப்பு சட்டம் பல நாடுகளையும் கவரும். அந்த நாடுகள் இதுபோன்ற சட்டத்தை இயற்ற வாய்ப்புகள் உள்ளன என்றார் ஸ்கட்டர்.

**நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் பலத்த மழை: கபினியிலிருந்து 50 ஆயிரம் கன அடி தண்ணீர் திறப்பு**

கர்நாடக மாநிலம், கபினி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதையடுத்து, அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை நொடிக்கு 50 ஆயிரம் கன அடியாக இருந்தது. இதையடுத்து, அணையிலிருந்து உபரி நீர் முழுவதும் திறந்துவிடப்பட்டுள்ளது.

கேரள மாநிலம், வயநாடு பகுதியில் புதன்கிழமை நள்ளிரவு முதல் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், மைசூர் மாவட்டம், எச்.டி.கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கபினி அணைக்கு வியாழக்கிழமை காலை முதல் நீர்வரத்து அதிகரித்தது.

காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு நொடிக்கு 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பகல் 12 மணியளவில் நீர்வரத்து 40 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. மாலை 6 மணி நிலவரப்படி நொடிக்கு 50 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

அணையின் மொத்தக் கொள்ளளவான 2284 அடியில் (கடல் மட்டத்தில் இருந்து), 2284 அடி நிரம்பியுள்ளது.

இதையடுத்து, அணையின் பாதுகாப்பு கருதி அணைக்கு வரும் நீர்வரத்தான 50 ஆயிரம் கன அடி நீரும் முழுமையாக வெளியேற்றப்படுகிறது.

வெள்ளப்பெருக்கு: அணையிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதையடுத்து, அந்தப் பகுதியில் அமைந்துள்ள ஐயப்பன் கோயில், பரசுராமா கோயில், அதினாருகாலு மண்டபம் வெள்ளத்தில் மூழ்கின.

நஞ்சன்கூடு நகரத்தின் பெரும்பகுதியில் வெள்ளம் புகுந்துள்ளது. சாமராஜ்நகர் மாவட்ட நிர்வாகம், வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொள்ளேகால் வட்டத்தில் அமைந்துள்ள பரசுக்கி, ககனசுக்கி அருவிக்கு

சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

கபினி அணையைச் சுற்றி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நதிக்கரை மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

கிருஷ்ணராஜசாகர் அணை: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியான குடகு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பலத்த மழை பெய்து வருவதால், மண்டியா மாவட்டத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

புதன்கிழமை நொடிக்கு 10,317 கன அடியாக இருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை 24,686 கன அடியாக அதிகரித்தது.

இதனால், அணையின் நீர்மட்டம் 94.70 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து நொடிக்கு 1489 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மேட்டூருக்கு 6,151 கன அடி நீர்வரத்து: மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வியாழக்கிழமை நொடிக்கு 6,151 கன அடியாக இருந்தது.

அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 46.62 அடியாக இருந்தது.

குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1001 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 15.75 டி.எம்.சியாக உள்ளது.

கபினி அணையிலிருந்து வியாழக்கிழமை திறந்துவிடப்பட்டுள்ள உபரி நீர் மேட்டூர் அணையை வெள்ளிக்கிழமை இரவு வந்தடையும். அப்போது நீர்வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் உயரும்.

**காடுகள் அழிப்பே வறட்சிக்கு காரணம்'**

காடுகளில் மரங்களை வெட்டியதால்தான் மழை வளம் குறைந்து, மண்வளம் கெட்டு வறட்சி  ஏற்பட்டது என்றார் பொறியாளர் சாமிநாதன்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், செயின்ட் ஜோசப் பாலிடெக்னிக் கல்லூரியில் "வறட்சியை வளமாக்குவோம்' எனும் தலைப்பிலான கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது. கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பாலமுருகன் தலைமை வகித்தார்.

கல்வி நிறுவன இணைச் செயலர் கிருபாகரன் முன்னிலையில், சிவில் துறை தலைவர் சாமிநாதன் "வறட்சியை போக்கி வளமாக்குவோம்' எனும் தலைப்பில் பேசியது:

காலங்காலமாக விவசாயம் சார்ந்த தொழிலை மட்டுமே நம்பியுள்ள நமது தேசம் இன்று பெரும் வறட்சியை சந்தித்து வரும் நிலையை மாற்ற அனைவருமே வேளாண் சார்ந்த தொழிலில் ஈடுபடவேண்டும். குறிப்பாக நவீன தொழில்நுட்ப உலகில் மாறி வரும் கால நிலைகளுக்கேற்ப மண்வளத்தையும், மழைவளத்தையும் பெருக்க போதிய உத்திகளை கையாள வேண்டும். இன்றைய இளைஞர்கள் பெரும்பாலானோர் பொறியாளர்களாக முன்னணி நிறுவனங்களில் பணிபுரியவே விரும்புகின்றனர். வேளாண் தொழில் செய்து நமது எதிர்கால சந்ததிகளுக்கு வாழ்வளிக்க முன்வரவில்லை. காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதும், ஆழ்குழாய் கிணறுகளால் பூமி துளையிடப்படுவதும், அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படுவதுமே மழைவளம் குன்றியதற்கும், மண்வளம் கெட்டதற்கும் மூல காரணமாகும். நமது முன்னோர்கள் இயற்கை சார்ந்த சூழலில் வாழ்ந்தபோது எவ்வித நோய்களுக்கும் ஆட்படாமல் பல காலம் வாழ்ந்தார்கள். ஆனால், இன்றோ அது முழுவதும் மாறி அறிவியல் வளர்ச்சி என்ற பெயரில் பல்வேறு நோய்களால் இன்னல்களை சந்தித்து வருவதுடன், பசுமையான சூழலை இழந்து வறட்சியால் வாடுகிற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்நிலை மாறி வளமாக இனிமேலும் நிலங்களை தரிசாக்காமல் இயன்றவரை ஏதேனும் ஒரு விவசாயம் சார்ந்த தொழில் செய்து நாம் வாழ்வதோடு இந்த தேசத்தையும் வாழ வைப்போம் என்ற உறுதியை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

முன்னதாக, திட்ட அலுவலர் ரஞ்சித்குமார் வரவேற்றார். மாணவர் கணேசன் நன்றி கூறினார். இதில், அனைத்துத்துறை மாணவர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

**சாகுபடிக்கு தண்ணீர்: மத்திய அரசு தலையிட மார்க்சிஸ்ட் கோரிக்கை**

குறுவை சாகுபடிக்கு கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

காவிர் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட இயலாது என கர்நாடகம் கைவிரித்துள்ளது.

இது பற்றாக்குறையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கு எதிரானது. இது கண்டனத்துக்குரியது.

இந்த நிலையில் மத்திய அரசு வேடிக்கை பார்ப்பது, இந்தியாவில் கூட்டாட்சி அமைப்பு மற்றும் அரசியல் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலிருந்து விலகுவதாகும்.

எனவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் குறுவை சாகுபடிக்கு கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜி.ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

**வால்பாறையில் 70 மி.மீ. மழை**

தமிழகத்தில் அதிகபட்சமாக வால்பாறையில் வியாழக்கிழமை 70 மி.மீ. மழை பெய்துள்ளது.

தென்மேற்கு பருவமழை பெய்து வரும் நிலையில் கேரள எல்லையை ஒட்டியுள்ள தமிழக பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக வால்பாறையில் 70 மி.மீ. மழை பெய்துள்ளது.

கேரளம், கடலோர கர்நாடகம், தெற்கு கர்நாடகம் ஆகிய பகுதிகளில் பருவமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் வெள்ளிக்கிழமை மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் பெய்த மழை அளவு (மி.மீ. - வியாழக்கிழமை காலை நிலவரம்): வால்பாறை - 70, தேவாலா - 60, நடுவட்டம் - 50, கூடலூர் - 40, சின்னக்கல்லாறு - 30, செங்கோட்டை - 20, பொள்ளாச்சி - 10.

**முட்டை விலை 15 காசுகள் குறைப்பு**

முட்டை நுகர்வில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து, முட்டைக் கொள்முதல் விலை வேகமாகக் குறைந்து வருகிறது. நாமக்கல் மண்டலத்தில் வியாழக்கிழமை மட்டும் ஒரே நாளில் 15 காசுகள் குறைக்கப்பட்டு முட்டைக் கொள்முதல் விலை ரூ.3.45 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

முட்டைக்கான சந்தை நிலவரம் சாதகமாக இல்லாததை அடுத்து, வியாழக்கிழமை மட்டும் ஒரே நாளில் 15 காசுகள் குறைக்கப்பட்டு, பண்ணைக் கொள்முதல் விலை ரூ.3.45ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த விலை மேலும் குறையக்கூடும் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**05.07.2013**

**மழைநீர் சேமித்தால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் :குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி அறிவுரை**

கடலூர் : மழைநீரை சேமிப்பதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் அமல்ராஜ் கூறினார்.
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ஊராட்சி தலைவர்களுக்கான மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு கடலூர் ஜாங்கிட் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. உதவி இயக்குனர் (ஊராட்சி) கதிரேசன் முன்னிலை வகித்தார்.
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் அமல்ராஜ் தலைமை தாங்கி பேசுகையில், "அதிகரிக்கும் மக்கள் தொகை, நகரமயமாதல், தொழிற்சாலை வளர்ச்சி உட்பட பல்வேறு காரணங்களால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது.
கடலூர் மாவட்டத்தில், ஆண்டுக்கு சராசரி மழை அளவு 1,316 மி.மீ., ஆகும்.
இதனால், கடலூர் மாவட்டத்தில், நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது.
குடிநீர் பற்றாக்குறையை போக்க தமிழக முதல்வர் ஜெ., கடந்த 2001ம் ஆண்டு மழைநீர் சேகரிப்பு திட்டத்தைத் துவக்கினார். அனைவருக்கும் தங்கள் வீடுகள், பகுதிகளில் மழைநீர் சேகரிக்கும் கடமை உள்ளது.
மழைநீரை சேமிப்பதன் மூலமாக நிலத்தடி நீர்மட்டம் உயரும். ஊராட்சி தலைவர்கள் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும்' என்றார்.
கூட்டத்தில், செயற் பொறியாளர் அந்தோணிசாமி, பொறியாளர்கள் ரவீந்திரன், கோபாலகிருஷ்ணன், ஊராட்சி தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.

**மழை பொய்த்ததால் கடும் வறட்சி குளமாகும் பெரிய ஏரிகள்**

உத்திரமேரூர் : மழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சியால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகள் கூட வறண்டு, குளங்களாக மாறி வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பாலாறு வறண்டாலும், பாசனத்திற்கு ஏரிகள் கைகொடுத்து வந்தன. மழைக்காலத்தில் இவற்றில் சேகரமாகும் நீர், ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்கு கை கொடுக்கும். ஆனால், மழை பொய்த்ததன் காரணமாக, கடந்த ஆண்டு, ஏரிகளில் போதிய அளவில் நீர் சேகரமாகவில்லை. மேலும், வரத்து கால்வாய்களும், நீர்பிடிப்பு பகுதிகளும் ஆக்கிரமிக்கப்பட்டதால், பல ஏரிகள் குறைவான நீரையே கொண்டிருந்தன.

இந்நிலையில் கோடை வெயில் காரணமாக, வற்றாத ஏரிகள் கூட, வற்றிவிட்டன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏரிகளில் மிகப் பெரிய ஏரிகளில் ஒன்று உத்திரமேரூர் ஏரி. இது, பல்லவ மன்னன் நந்தி வர்மன் காலத்தில் உருவாக்கப்பட்டது. பெருநகர் பகுதியில், செய்யாற்றில் தடுப்பணை கட்டப்பட்டு, வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது ஏரியில் நிரப்பப்படும். கடந்த 2002ம் ஆண்டிற்கு பிறகு ஏரியில் தண்ணீர் நிரம்பவில்லை. இந்த ஏரி நீரை பயன்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் செய்ததன் மூலம், அறுவடையான நெல்லை, இருப்பு வைக்க இடமின்றி தவித்த காலமும் உண்டு.

ஆனால், கடல்போல் பரந்து விரிந்து எப்போதும் நீர் வற்றாமல் காட்சியளிக்கும் உத்திரமேரூர் ஏரி, தற்போது வறண்டு, குளமாக மாறிவிட்டதை பார்த்து விவசாயிகளின் கண்கள் கலங்குகின்றன.

**தொட்டி உண்டு...! தண்ணீர் இல்லை...! தாகம் தீர்க்க அலையும் கால்நடைகள்**

கடம்பத்தூர் : கிராமத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு, விவசாயிகள் பயனடைந்து வரும் நிலையில், கால்நடைகள் குடிநீர் குடிக்க வசதியாக உள்ள தொட்டியில் தினசரி குடிநீர் விட ஊராட்சி நிர்வாகம் வசதி ஏற்படுத்த வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருப்பது தெரியவில்லை

திருவள்ளூர் மாவட்டத்தில், பட்டா நிலங்களில் மேயும் கால்நடைகளை பிடித்து, அதை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வசதியாக, கிராமங்களில் கால்நடை பட்டியும், கால்நடைகள் குடிநீர் குடிக்க வசதியாக, குடிநீர் தொட்டிகளும் கட்டப்பட்டு இருந்தன. இவை பல கிராமங்களில் தற்போது எங்குள்ளன என, தெரியவில்லை.

சில கிராமங்களில் இருக்கும் குடிநீர் தொட்டிகளிலும், குடிநீர் செல்ல வசதி ஏற்படுத்தி தரவில்லை. கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர், வெள்ளேரிதாங்கல் பகுதியில், கிராம மக்கள் கால்நடைகளை வளர்த்து பயனடைந்து வருகின்றனர். இங்கு ஒவ்வொரு வீட்டிலும் ஆடு, மாடு என, கால்நடைகள் உள்ளன.

காலையில் தங்களது கால்நடைகளை அருகில் உள்ள வயல்வெளிக்கு ஓட்டிச் சென்று மேய விடுகின்றனர். மாலையில் இவர்கள் கால்நடைகளுடன் வீடு திரும்புகின்றனர். புற்களை மேயும் கால்நடைகளுக்கு, இடையில் குடிக்க தண்ணீர் தேவை.

இதற்கென வெங்கத்தூர் கிராமத்தில், வெள்ளேரிதாங்கல் செல்லும் சாலையில், கால்நடைகளுக்கான குடிநீர் தொட்டி இப்போதும் உள்ளது. இத்தொட்டிக்கு தண்ணீர் செல்ல வசதியாக குழாய் உள்ளது.

கணக்கெடுப்பு

ஆனால், அதில் குடிநீர் மட்டும் வருவதில்லை. இதனால், கால்நடைகளை அருகில் உள்ள குளம், குட்டைகளை தேடி ஓட்டிச் செல்ல வேண்டி உள்ளது.

தற்போது அரசு இலவச ஆடு, மாடுகளை வழங்கி வரும் நிலையில், கால்நடைகளின் தாகத்தை தீர்க்க, கிராமங்களில் ஆங்காங்கே குடிநீர் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அந்தந்த ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""ஊராட்சிகளில் உள்ள கால்நடை குடிநீர் தொட்டிகள் குறித்து

கணக்கெடுப்பு நடத்தி, அத்தொட்டிக்கு ஊராட்சிகள் மூலம் குடிநீர் வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

**சூரியசக்தி மூலம் மோட்டார்கள் இயக்க "பேனல்'கிடைக்குமா?முன்பணம் செலுத்தி காத்திருக்கும் விவசாயிகள்**

திருத்தணி : மின்வெட்டால் விவசாயிகளின் பயிர்கள் தண்ணீரின்றி கருகுவதை தடுக்கும் வகையில், அரசு, 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சூரியசக்தி பலகை (பேனல்) வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தது. இதன் மூலம், மின் மோட்டார்களை இயக்க முடியும். இதற்கு, விவசாயிகள் முன்பணம் செலுத்தி பதிவு செய்தும் அவர்களுக்கு இதுவரை

கிடைக்காமல்

காத்திருக்கின்றனர்.

மாவட்டத்தில் உள்ள திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் திருவாலங்காடு ஆகிய நான்கு ஒன்றியங்களில், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். இவர்கள் நெல், கரும்பு, வேர்க்கடலை, கேழ்வரகு, சவுக்கு, பூச்செடிகள் மற்றும் காய்கறி போன்ற பயிர்கள் செய்கின்றனர். இதில், நெல், கரும்பு, வேர்க்கடலை மற்றும் காய்கறி ஆகிய பயிர்களுக்கு அதிகளவில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மின்வெட்டு

இந்நிலையில், பகலில், எட்டு மணி நேரமும், இரவு நேரத்தில் தேவைக்கேற்ப, ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை சுழற்சி முறையில் மின்வெட்டு ஏற்படுகிறது.

மேலும், விவசாய மோட்டார்களை இயக்குவதற்கு மும்முனை மின்சாரம், நாளொன்றுக்கு, மூன்று மணி நேரம் மட்டுமே வினியோகம் செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் தங்களின் பயிர்களுக்கு குறித்த நேரத்தில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு முடியாமல் பயிர்கள் கருகி விடுகிறது. குறிப்பாக, நெற்பயிர் தண்ணீரின்றி கருகுவதால், பெரும்பாலான விவசாயிகள், பயிர் செய்ய ஆர்வம்

காட்டவில்லை.

மின்வெட்டால், பெரும்பாலான விவசாயிகள் பயிர் செய்யாமல் கட்டடம் மற்றும் தனியார் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வந்தனர். இந்நிலையில், கடந்த ஏப்.14ம் தேதி முதல், மே, 23ம் தேதி வரை, வேளாண்மை துறை சார்பில், அனைத்து வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது.

ரூ.5 லட்சம் கடனுதவி

அப்போது, முதல்வர் ஜெயலலிதா, விவசாயிகள் பயன்பெறும் வகையில்,ச பயிர் செய்வதற்கு ஏதுவாக, மின்தடை நேரத்திலும் மின் மோட்டார்கள் இயக்குவதற்கு சூரியசக்தி பலகை (பேனல்) வழங்கவும், அதற்காக, அரசு சார்பில், 5 லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கும் திட்டத்தை சட்டசபையில் அறிவித்தார்.

இந்த சூரியசக்தி பலகை (பேனல்கள்) மூலம், சூரிய ஒளிக்கதிரில் இருந்து மின்சாரத்தை சேமித்து, மின்தடை நேரத்தில், மின்மோட்டார்கள் இயங்குவது போல வடிவமைக்கப்பட்டது. இந்த பேனல் வாங்க அரசு வழங்கும், 5 லட்சம் ரூபாய் கடனுதவியில், 4.10 லட்சம் ரூபாய் அரசே மானியமாக தருகிறது.

90 ஆயிரம் ரூபாயில், 10 ஆயிரம் ரூபாய் முன்பணமாக செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். மீதமுள்ள, 80 ஆயிரம் ரூபாயை, ஆண்டு முடிவதற்குள் தவணை முறையில் செலுத்தலாம். விவசாயிகளிடம் இருந்து முன்பணம் பெற்று பெயர்கள் பதிவு செய்யப்பட்டன.

ஆனால், பணம் கட்டிய, விவசாயிகளுக்கு இருமாதம் ஆகியும், இன்று வரை ஒருவருக்குக்கூட சூரியசக்தி பேனல்கள் கிடைக்கவில்லை. எப்போது கிடைக்கும் என, விவசாயிகள் எதிர்நோக்கி காத்து இருக்கின்றனர்.

2000 விவசாயிகள்

இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வோளண்மை துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:

மாவட்டம் முழுவதும் உள்ள, 14 ஒன்றியங்களில், 50 விவசாயிகளிடம் இருந்து சூரியசக்தி பேனல் வழங்க முன்பணம் பெற்றுள்ளோம். குறிப்பாக திருத்தணி

ஒன்றியத்தில் மட்டும், 12 விவசாயிகள் பேனல் தேவை என, பணம் செலுத்தி பெயரை பதிவு செய்துள்ளனர்.

பேனல் வழங்குவது குறித்து, அரசு தான் முடிவு எடுக்க வேண்டும். இந்தாண்டில் (2013-14) தமிழகம் முழுவதும், 2.000 விவசாயிகளுக்கு மட்டும் இத்திட்டம் மூலம் கடனுதவி வழங்கப்படும். அடுத்த ஆண்டிற்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

சூரியசக்தி மின் மோட்டாரின் பயன்கள்

டூ விவசாயிகள் மின் இணைப்புக்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

டூ விவசாயிகள் விரும்பிய இடத்தில் இதை பொருத்தி, மின்மோட்டாரை இயங்கச் செய்யலாம்.

டூ சிறு, குறு விவசாயிகளுக்கு ஏதுவாக இருக்கும்.

டூ சூரியசக்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தால், 5. எச்.பி., மோட்டாரை மட்டுமே இயக்க முடியும்

டூ மின்சாரம் இருக்கும் போது சேமித்து, மின்தடை நேரத்தில் மின்மோட்டார்களை இயங்கச் செய்யும்.

டூ இதற்கு விலை உயர்ந்த அலுமினிய மின் கம்பிகள் தேவையில்லை.

டூ விவசாயிகள் இரவு நேரத்தில் சென்று மின்மோட்டார்களை இயக்கத் தேவையில்லை.

**சேலம், ஆத்தூர் விவசாயிகளுக்கு 5 லட்சம் மரக்கன்று வினியோகம்**

சேலம்: சேலம் மற்றும் ஆத்தூர் வன கோட்டத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு, ஐந்து லட்சம் மரக்கன்றுகளை இந்தாண்டு வினியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உயிர்பன்மை மற்றும் பசுமையாக்குதல் திட்டம் குறித்து, சேலம், அஸ்தம்பட்டி வன அலுவலகத்தில் உள்ள அரங்கில், விவசாயிகள் மற்றும் வன அதிகாரிகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

சேலம் மாவட்ட வன அலுவலர் தங்கராஜ் வரவேற்றார். ஆத்தூர் மாவட்ட வன அலுவலர் தனபால், மண்வள பாதுகாப்பு அலுவலர் லோகநாதன், இடைபடு காடுகள் திட்ட வன அலுவலர் குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பசுமையாக்குதல் திட்டப்பணிகள் குறித்து குஜராத் வனத்துறை முன்னாள் தலைவரும், திட்ட ஒருங்கிணைப்பாளருமான வர்மா பேசினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் வனப்பகுதியில் ஒட்டியுள்ள கிராமங்களில், மரங்களை வளர்க்க வேண்டும் என்ற திட்டத்தின் கீழ், உயிர்பன்மை மற்றும் பசுமையாக்குதல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சேலம் மற்றும் ஆத்தூர் வன கோட்டத்துக்கு உட்பட்ட பகுதியில், கடந்தாண்டு விவசாயிகளுக்கு, நான்கு லட்சம் மரக்கன்று, வனத்துறையின் சார்பில், இலவசமாக வழங்கப்பட்டது. ஒரு ஹெக்டேரில், 2,500 மரக்கன்று வரை விவசாயிகள் நட்டனர்.

மண் வளத்துக்கு ஏற்ற வகையில் விவசாயிகளுக்கு மரக்கன்று வழங்கப்பட்டன. அதிகளவு தேக்கு மரம், பெரு மரம், மலை வேம்பு, குமிளி, வேப்பங்கன்றுகளை விவசாயிகள் வாங்கியுள்ளனர். கடந்தாண்டு தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டதால், தண்ணீரின்றி, 30 சதவீதம் மரக்கன்று வளரவில்லை.

தற்போது விவசாயிகள், வன அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பசுமையாக்குதல் திட்டத்தில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது குறித்து விளக்கப்பட்டுள்ளது. இந்தாண்டு சேலம், ஆத்தூர் வன கோட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஐந்து லட்சம் மரக்கன்றுகளை வினியோகம் செய்ய உள்ளோம். விவசாயிகள் நல்ல முறையில் மரக்கன்றுகளை நட்டு, உரிய முறையில் தண்ணீர் மற்றும் உரங்களை போட்டு மகசூலை அதிகப்படுத்த வேண்டும். மரம் வளர்ந்த பிறகு, அதன் பலனை விவசாயிகள்தான் அடைய உள்ளனர். மரங்களின் பராமரிப்பு செலவையும் அரசே ஏற்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

உதவி வன பாதுகாவலர் தன்னப்பன், வன விரிவாக்க அலுவலர் அசோகன் உள்பட ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் பங்கேற்றனர்.

**கரும்பு, சோளக்காட்டில் புகுந்து யானைகள் அட்டகாசம் வனத்துறையினர் வெடிவைத்து விரட்ட தீவிரம்**

சேலம்: சேலம், தர்மபுரி மாவட்டத்தை, ஓராண்டுக்கும் மேலாக சுற்றிவரும் ஆறு காட்டு யானைகள், மீண்டும் டேனிஷ்பேட்டை வனப்பகுதியில் முகாமிட்டு, அங்குள்ள கரும்பு, சோளம் பயிரிட்ட பகுதிகளை நாசப்படுத்தி வருகிறது. மாலை வேளைகளில், கிராமப்பகுதிக்குள் யானை கூட்டம் புகுந்துவிடுவதால், அங்குள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர். வெடி வைத்து யானையை, வனத்துறை ஊழியர்கள் விரட்டி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டம், அரூர் வனப்பகுதியில் இருந்து, ஓராண்டுக்கு முன் ஒரு குட்டியானை உள்பட, ஆறு யானைகள் வெளியேறின. தண்ணீர் தேடியும், இரை தேடியும் அவை நகருக்குள் படையெடுத்தன. வனப்பகுதியை சுற்றியுள்ள விவசாய நிலங்களுக்குள் புகுந்து கொள்ளும் அந்த யானைகள், அங்கு பயிரிடப்பட்டுள்ள கரும்பு, சோளம், வாழை உள்ளிட்ட பயிர்களை நாசம் செய்தது. பின், அங்கிருந்து சேலம் மாவட்டத்துக்குள் வந்த யானைகள், வாழப்பாடி, அயோத்தியாபட்டணம் பகுதிகளில் சுற்றித்திரிந்தது. வன ஊழியர்கள் விரட்டியடித்தனர்.

தற்போது, மூன்று மாதங்களுக்கு பின், அந்த ஆறு காட்டு யானைகளும், பாப்பிரெட்டிப்பட்டிக்கும், டேனிஷ்பேட்டைக்கும் இடையே கே.மோரூர் வனப்பகுதியில், இரண்டு நாட்களாக சுற்றிதிரிகின்றன. கண்ணப்பாடி, கோவிந்தாபுரம், மோரூர், பாலமேடு, செல்லப்பள்ளிக்கோம்பை உள்ளிட்ட மலைக்கிராமங்கள் வழியாக டேனிஷ்பேட்டை வனச்சரகத்துக்குள் புகுந்துள்ளது. நேற்று காலை, 7 மணிக்கு, பொனக்காடு, கருவாட்டு பாறை, பாலமேடு பகுதிக்குள் புகுந்து கடும் அட்டகாசம் செய்தன. கரும்பு தோட்டங்களை நாசப்படுத்தியது. டேனிஷ்பேட்டை வனச்சரக அலுவலர் பாண்டுரங்கன் தலைமையில், 20க்கும் மேற்பட்ட வன ஊழியர்கள், வெடி வைத்து யானையை விரட்டியடித்தனர். பொதுமக்களும், கற்களை வீசியும், பட்டாசு வெடித்தும் யானைகளை விரட்டுவதால், அவை செல்வதறியாமல் திணறி வருகிறது. தங்களுடைய

நிலத்துக்குள் யானை புகுந்து விடக்கூடாது என்பதற்காக, ஆங்காங்கே தீயை காட்டி விவசாயிகள் விரட்டுவதால், யானைகள் கடும் கோபத்தில் உள்ளன.

நேற்று இரவு 7 மணியளவில், டேனிஷ்பேட்டை புதூர் கிராமத்தில், கோட்டமேடு பகுதியில் உள்ள தெருக்களில் யானைகள் புகுந்ததால் அங்கிருந்த மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். யானையை கண்டு மிரண்டு ஓடியதில் பலர் காயமடைந்தனர்.

யானை கூட்டம் சுற்றி வரும் கிராமப்பகுதி மக்கள், இரவு முழுவதும் தூக்கமில்லாமல் தவித்து வருகின்றனர். யானை இருக்கும் பகுதிக்குள் யாரும் செல்ல வேண்டாம் என, அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். வனத்துறை ஊழியர்கள், ஆறு யானைகளையும் காட்டு பகுதிக்குள் விரட்ட தீவிரம் காட்ட வேண்டும் என, பொதுமக்கள் வலியுறுத்தினர்.

**வேளாண் பொறியியல் பட்டயப்படிப்பு துவக்கம்**

சேலம்: சேலம் விமான நிலையம் எதிரில் உள்ள பாலகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில், வேளாண்மை பொறியியல் பட்டயப்படிப்பு துவங்கப்பட்டது.

துவக்க விழாவில், முதல்வர் ஞானசுந்தர் வரவேற்றார். கல்லூரி சேர்மன் பாலகிருஷ்ணன் தலைமை வகித்து பேசுகையில்,""இந்த பட்டயப்படிப்பு, தமிழகத்திலேயே நான்காவது கல்லூரியாக நமது கல்லூரியில் துவங்கப்பட்டுள்ளது. பட்டயப்படிப்பு முடித்த மாணவர்களுக்கு, கல்லூரி வளாகத்திலேயே வேலைக்கும் ஏற்பாடு செய்யப்படும்," என்றார்.

சேலம் வேளாண்மை துறை இணை இயக்குனர் சுந்தர் கலந்து கொண்டு, பேசியதாவது:

வேளாண்மை பொறியியல் பட்டய படிப்பு முடித்தால், எதிர்காலத்தில் நல்ல வேலை வாய்ப்பு பெற முடியும். அகில இந்திய அளவில், விவசாயம் சார்ந்த தொழில் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு, பட்டயப்படிப்பு படித்த மாணவர்கள் ஏராளமாக தேவைப்படுகின்றனர். நவீன விவசாயத்தில், மாணவர்களின் பங்கு மிக முக்கியம்.

சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட அளவில், பாலகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் துவங்கியுள்ள பட்டயப்படிப்பு, ஏழை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

இவ்வாறு அவர் பேசேலத்தில் பூட்டிய வீட்டு கதவை உடைத்து

நகை, பணம் கொள்ளை: போலீஸ் விசாரணை

சேலம்: சேலம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் பூட்டிய வீட்டு கதவை உடைத்து நகை, பணம் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் குறித்து, போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம், கொண்டப்பநாயக்கன்பட்டியை சேர்ந்தவர் அண்ணாமலை. இவரின் மகன் நாராயணன், 41. இவர் தன் வீட்டை நேற்று முன்தினம் பூட்டி விட்டு, ஏற்காட்டில் உள்ள, தன் மாமியார் வீட்டுக்கு சென்று விட்டார்.

இந்நிலையில், வீட்டின் கீழ் பகுதியில் வசித்து வரும், வீட்டின் உரிமையாளர் நேற்று முன்தினம் பார்த்த போது, மேல் வீட்டு கதவு உடைக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது. இதனால், அதிர்ச்சி அடைந்த அவர், நாராயணன், போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

வீட்டுக்கு நாராயணன் வந்து பார்த்த போது, வீட்டின் பீரோவில் வைக்கப்பட்டு இருந்த நெக்லஸ், வைர மோதிரம், கம்மல் தொடு உட்பட, ஒன்பது பவுன் நகை, பணம் ஆகியன காணாமல் போய் இருந்தது. கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு, இரண்டு லட்சம் ரூபாய் என தெரிய வந்துள்ளது.

இந்த கொள்ளை குறித்து, நாராயணன் கன்னங்குறிச்சி போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகிறார். இந்த கொள்ளை சம்பவம் கன்னங்குறிச்சி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

**மாநில பசுந்தீவன உற்பத்தித் திட்டம் 900 ஏக்கர் நிர்ணயம்: கலெக்டர் தகவல்**

நாமக்கல்: "மாநில பசுந்தீவனம் உற்பத்தி திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்துக்கு, 900 ஏக்கர், இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது' என, மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:
தமிழக அரசு, பசுந்தீவன உற்பத்தியை பெருக்கும் வகையில், மாநில பசுந்தீவனம் உற்பத்தி திட்டம் எனும் திட்டத்தை, 2013-2014ம் கல்வியாண்டில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ், பல்லாண்டு தீவனப்பயிர், கோ 3 மற்றும் கோ 4 பயிரிடும் விவசாயிகளுக்கு, 0.25 ஏக்கருக்கு, 100 சதவீதம் மானியம் வழங்க உள்ளது.
இத்திட்டத்தில், கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு, அதிகபட்சம் ஒரு ஏக்கர் வரை மானியம் வழங்க வாய்ப்புள்ளது. இரண்டு கால்நடை உள்ளவர்கள், இத்திட்டத்தில் இணைந்து பயன்பெறலாம். கடந்த ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள், மீண்டும் பயனடைய இயலாது.
நாமக்கல் மாவட்டத்திற்கு, இத்திட்டத்தின் கீழ், 900 ஏக்கர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தீவனப் பயிர் வளர்க்கும் விவசாயிகளுக்கு, நீர் தெளிப்பான் கருவி, 75 சதவீதம் வழங்கப்பட உள்ளது. நீர் தெளிப்பான் பெற விரும்பும் விவசாயிகள், ஒரு ஏக்கரில், தீவனப் பயிர் வளர்த்து, பராமரிப்பு செய்து வரவேண்டும்.
அரசு மானியத்தில், புல்வெட்டும் இயந்திரத்தை பெற்ற விவசாயிகள் இத்திட்டத்திற்கு தகுதி பெற முடியாது. இத்திட்டத்திற்காக, 200 நீர் தெளிப்பான் கருவி வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தில், தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை 11 தாக்காளி சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், தாக்காளி, மிளகாய் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து ஒரு நாள் பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 11ம் தேதி, தக்காளி மற்றும் மிளகாய் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில், தக்காளி, மிளகாயில் உள்ள வீரிய ஒட்டு ரகம், நடவு முறை, சொட்டு நீர் பாசன வசதி போன்ற, பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வரும், 10ம் தேதிக்குள், மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் அல்லது, 04286 266650, 266345, 266244 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தரமான விதை விற்பனை வேளாண்துறை அறிவுரை**

கிருஷ்ணகிரி: "தரமான விதைகளை விற்பனை செய்ய வேண்டும்' என, கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணையின் மூலம் பாசன வசதி பெறும் பகுதிகளில், தற்போது, விவசாயிகள் முதல்போக சாகுபடிக்கு நெல் நாற்றங்கால் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, விதை விற்பனையாளர்கள், தரமான நெல் விதைகளை விற்பனை செய்ய வேண்டும்.
விதை விற்பனையாளர்கள், தாங்கள் விற்பனை செய்யும் விதை குவியல்களின் தரமறிந்து, விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். விதை

உற்பத்தியாளர்கள் அல்லது மொத்த விற்பனையாளர்களிடமிருந்து விதைக்கொள்முதல் செய்யும் போது, விற்பனை பட்டியல்களுடன், விதை முளைப்புதிறன் பகுப்பாய்வு அறிக்கையையும் கேட்டு சரிபார்க்க வேண்டும். பகுப்பாய்வு அறிக்கை பெறப்படாத விதைக்குவியல்களிலிருந்து பணி விதை மாதிரிகள் எடுத்து, ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாய் செலுத்தி, கிருஷ்ணகிரியில், மோகன்ராவ் காலனி, முதல் குறுக்குத்தெருவில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைத்து, பகுப்பாய்வு அறிக்கையினை பெறவேண்டும்.
விதைக்குவியல்களின் தரமறிந்து, தரமான விதைகளை, விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**எல்.பி.பி., விவசாயிகள் உண்ணாவிரதம் ஈரோடு எஸ்.பி.,க்கு கோர்ட் நோட்டீஸ்**

ஈரோடு: கீழ்பவானி வாய்க்கால் பாசன விவசாயிகள் உண்ணாவிரதத்துக்கு அனுமதி வழங்க மறுப்பதற்கு, வரும் செவ்வாய் கிழமைக்குள் பதில் அளிக்கும்படி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சசிதரன், ஈரோடு எஸ்.பி.,க்கு உத்தரவிட்டுள்ளார்.
ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி வாய்க்கால் மூலம், 2.07 லட்சம் விவசாயிகள் பாசன வசதியை பெறுகின்றனர். தண்ணீர் வீணாவதை தடுக்கும் பொருட்டு, 1,200 கோடி ரூபாயில், 200 கி.மீ., நீளத்துக்கு கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டம் தயாரித்து, உலக வங்கி நிதியை பெறுவதற்கான பணிகள் நடந்து வருகிறது. முதற்கட்டமாக, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அரச்சலூர் பகுதியில் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி விரைவில் துவங்க உள்ளன. நிலத்தடி நீராதாரங்கள் கடுமையாக பாதித்து, கிணறு, ஆழ்குழாய், ஒரு லட்சம் மரங்கள், 500 கிராமங்களின் குடிநீர் ஆதாரம் பாதிக்கப்படும் எனக்கூறி விவசாயிகள் சங்கத்தினர் போராடி வருகின்றனர்.
கீழ்பவானி பாசன விவசாயிகள் நலச்சங்கம் சார்பில், கான்கிரீட் தளம் திட்டத்துக்கு

எதிர்ப்பு தெரிவித்து, ஜூலை, 2ம் தேதி, காளைமாட்டு சிலை சிம்னி ஹோட்டல் முன்புறம் உண்ணாவிரதம் அறிவித்தனர்.
ஈரோடு எஸ்.பி., பொன்னி, சூரம்பட்டி இன்ஸ்பெக்டர் விஜயன் ஆகியோரிடம் அனுமதி கேட்டு கடிதம் வழங்கினர். பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசலை காரணம் கூறி அனுமதி மறுத்துவிட்டனர்.
இதனை அடுத்து, கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கம் சார்பில், அதன் தலைவர் நல்லசாமி, சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். நேற்று மனு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி சசிதரன், விவசாயிகள் உண்ணாவிரதத்துக்கு அனுமதி மறுத்ததற்கான காரணம் மற்றும் உண்ணாவிரதத்துக்கு இடத்தை தேர்வு செய்து, பதில் மனுவை செவ்வாய் கிழமைக்குள் தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்.

**பார்த்தீனியம் செடிகளால் பாதிப்பு விலங்குகளுக்கு உணவுத் தட்டுப்பாடு**

கூடலூர் : முதுமலையில் அதிகரித்து வரும் "பார்த்தீனியம்' செடிகளை அகற்ற வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
முதுமலை புலிகள் காப்பகத்தில், கடந்த காலங்களை போல, ஆண்டு முழுவதும் பார்த்தீனியம், லென்டானா களைச்செடிகளை அகற்றும் பணிகள் நடப்பதில்லை. இதன் காரணமாக, மழை காலத்தில், வனப்பகுதியில் பெரும்பாலான இடங்களில், இந்த களைச்செடிகள் அதிகளவில் வளர்ந்துள்ளன. இதனால், காட்டெருமை, யானை உட்பட பிற விலங்குகளுக்கான உணவுப் பற்றாக்குறை நாளுக்கு, நாள் அதிகரித்து வருகிறது.
"இச்செடிகளை 5 ஆண்டுகள் தொடர்ச்சியாக, பூ பூக்கும் முன் அழிக்க வேண்டும்; அப்போது தான் இவை மீண்டும் வளராமல் இருக்கும்' என, தாவரவியல் ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.
இதற்கான தொடர் நடவடிக்கை இல்லாத காரணத்தால், இச்செடிகளின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து

வருகிறது. எனவே, பார்த்தீனியம் உட்பட பிற களைச் செடிகளை முழுமையாக அழிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வாழை விவசாயிகள் நாளை ஆலோசனை**

திருச்சி: "வாழை விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை நடக்கிறது' என, அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருச்சி மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் வெளியிட்ட அறிக்கை:
ஒவ்வொரு ஆண்டும் சூறைக்காற்றினால் வாழைகள் பாதிக்கப்பட்டு, வாழை சாகுபடியாளர்கள் தொடர்ந்து பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர்.
கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியாலும், கடந்த ஏப்ரல், மே மாதங்களில் வீசிய சூறைக்காற்றிலும் கடும் இழப்பை வாழை விவசாயிகள் சந்தித்துள்ளனர். பாதிக்கப்பட்ட வாழை வியாபாரிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய மத்திய, மாநில அரசுகள் எதையும் கண்டுகொள்ளாமல் உள்ளது. கடன் வழங்கிய அத்தனை வங்கிகளும் விவசாயிகளுடையே கடன்களை கட்டவேண்டுமென கட்டாயப்படுத்தி வருகின்றன.
ஆகையால், வாழை விவசாயிகளின் அவலநிலையை அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை குறித்து ஆலோசனை நடத்த, நாளை காலை, திருச்சி மாவட்டம், குழுமணி சிவன்கோவில் வளாகத்தில், வாழை விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது.
இதில், அனைத்து பகுதி வாழை விவசாயிகளும் பங்கேற்று ஆலோசனை வழங்கலாம்.

**வறட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

ஆலங்குடி: திருவரங்குளம் ஒன்றிய பகுதியில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்தை உடனே வழங்கக்கோரி ஆலங்குடி தாலுகா அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் அசோகன், தலைவர் செல்வராசு, பொருளாளர் சுந்தரலிங்கம், மணி, துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் மாதவன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.

சி.டி.ஐ., ஒன்றிய செயலர் நல்லதம்பி, ஒன்றிய துணை செயலாளர் சொரண்குமார், பொருளாளர் மணி, மாவட்டக்குழு உறுப்பினர் செல்வக்குமார், மாசிலாமணி, பூபதி, வாலியர் சங்க ஒன்றிய செயலாளர் முருகன், மாதர் சங்கம் வாலண்டினா ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினர்.

சி.பி.ஐ., மாவட்டச் செயலாளர் செங்கோடன் ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து பேசியதாவது:

ஆலங்குடியில் கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

பழுதடைந்த மின்மாற்றி மற்றும் மின் கம்பங்களை உடனடியாக சரிசெய்ய வேண்டும். மும்முனை மின்சாரம் 12 மணிநேரம் வழங்க வேண்டும்.

பத்திரப்பதிவில் கிராமப்புறங்களுக்கு கட்டணத்தைத் தளர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்து பேசினர்.

குணசேகரன், அய்யாமணி, ஆறுமுகம், அழகுசுந்தரம், பன்னீர்செல்வம், ராஜேந்திரன், சண்முகம், கருப்பையா, வைத்திலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி தஞ்சையில் நாளை நடக்கிறது**

தஞ்சாவூர்: "தஞ்சையிலுள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவ பயிற்சி முகாம் நாளை (6ம் தேதி) நடக்கிறது. இதில், ஆர்வம் உள்ளவர், பங்கேற்கலாம்' என, பல்கலை நிர்வாகம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தஞ்சை வட்டார போக்குவரத்துக்கழகம் அருகே தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை இயங்கி வருகிறது. இங்கு, நாட்டுக்கோழி வளர்ப்பு முறை மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவ பயிற்சி முகாம் நாளை (6ம் தேதி) நடக்கிறது.

இப்பயிற்சியில் சேர விரும்புவோர், 6ம் தேதி காலை 10 மணிக்கு, பல்கலைக்கு நேரில் வரலாம். மேலும் விபரம் அறிய மொஃபைல் நம்பர் 98424 55833, 04362 - 204009 என்னும் நம்பரில் தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு, அதில், கூறப்பட்டுள்ளது.

**தென்னை சாகுபடி**

விவசாயிகள் ஆர்வம்தேனி;தென்னை சாகுபடி செய்ய விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தேனி மாவட்டத்தில் தென்னையில் செம்பான் சிலந்தி பூச்சி தாக்குதல், கூன் வண்டு தாக்குதல், உட்பட பல்வேறு நோய் தாக்குதல் ஏற்பட்டு விளைச்சல் வீழ்ச்சி அடைந்தது.
இதனால் தென்னையை அகற்றி விட்டு, வேறு பயிர்களை சாகுபடி செய்ய விவசாயத்துறை மானிய உதவிகளையும் வழங்கியது.
தற்போது தேங்காய், இளநீர் விலையும், விற்பனையும் அதிகரித்துள்ளது. விவசாய, தோட்டக்கலைத் துறைகள் தென்னை சாகுபடிக்கு ஏராளமான மானிய உதவிகளை வழங்குகின்றன. எனவே விவசாயிகள் தற்போது தென்னை சாகுபடி செய்வதில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மீண்டும் தேனி, கம்பம், உத்தமபாளையம், கூடலூர் பகுதிகளில் தென்னை சாகுபடி பரப்புகள் அதிகரித்து வருகின்றன.

**தென்னை சாகுபடி விவசாயிகள் ஆர்வம்**

தேனி;தென்னை சாகுபடி செய்ய விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தேனி மாவட்டத்தில் தென்னையில் செம்பான் சிலந்தி பூச்சி தாக்குதல், கூன் வண்டு தாக்குதல், உட்பட பல்வேறு நோய் தாக்குதல் ஏற்பட்டு விளைச்சல் வீழ்ச்சி அடைந்தது.
இதனால் தென்னையை அகற்றி விட்டு, வேறு பயிர்களை சாகுபடி செய்ய விவசாயத்துறை மானிய உதவிகளையும் வழங்கியது.

தற்போது தேங்காய், இளநீர் விலையும், விற்பனையும் அதிகரித்துள்ளது. விவசாய, தோட்டக்கலைத் துறைகள் தென்னை சாகுபடிக்கு ஏராளமான மானிய உதவிகளை வழங்குகின்றன. எனவே விவசாயிகள் தற்போது தென்னை சாகுபடி செய்வதில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மீண்டும் தேனி, கம்பம், உத்தமபாளையம், கூடலூர் பகுதிகளில் தென்னை சாகுபடி பரப்புகள் அதிகரித்து வருகின்றன.

## விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க பட்டுவாடாவில் முறைகேடு நடப்பதாக புகார்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு வழங்கியது போக, மீதமுள்ள 23 கோடி ரூபாய் நிவாரண தொகையை, விடுபட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்தாண்டு திருவாடானை, பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் செய்யப்பட்டது. இதில், பருவமழை பொய்ப்பால் ஒரு லட்சத்து 9 ஆயிரம் எக்டேர் நிலங்களில் பயிரடப்பட்ட சாவியாகி போகின. இதனால், கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் பெரிதம் நஷ்டம் அடைந்தனர். மாவட்டத்தின் நெற்களஞ்சியமான திருவாடானை பகுதியில் மட்டும் 40 ஆயிரம் எக்டேர் விவசாய நிலங்கள் விளைச்சல் இன்றி பாதிக்கப்பட்டன. மீதமுள்ள 69 ஆயிரம் எக்டேர் நிலங்கள் ராமநாதபுரம், திவாடானை, பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு நிவாரண தொகை வழங்க முடிவு செய்தது. அதன்படி, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு 131 கோடியே 65 லட்சத்து 86 ஆயிரத்து 48 ரூபாய் வறட்சி நிவாரண தொகையாக வழங்கப்பட்டது. 50 சதவீத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்கள் அந்தந்த பகுதி வி.ஏ.ஓ., மூலம் சர்வே எடுத்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. கணக்கில் சேர்க்கப்படாத, பாதிக்கப்பட்ட

விவசாயிகள் தங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், என தொடர்ந்து மனு கொடுத்தனர். பரமக்குடி விவசாயி செல்வமணி கூறியதாவது: கணக்கு சரியாக எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களை மீண்டும் சர்வே எடுத்து, அவர்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். மீதமுள்ள 23 கோடி ரூபாய் நிவாரண தொகையை, விடுபட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், என்றார். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் பிரான்சிஸ் கூறியதாவது: மாவட்டத்தில் கடந்த ஜூன் 30ம் தேதி வரை, கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நிவாரண தொகை ரொக்கமாகவும், ஜூலை 1 முதல் காசோலையாகவும் வழங்கப்படுகிறது. வாங்காத விவசாயிகள் முறையான ஆவணங்கள் இல்லாததால், அவர்களின் தொகையை, வருவாய்த்துறை ஒத்துழைப்போடு, மோசடியாக பெற முயற்சிப்பதாக புகார் எழுந்தது. இதனால், உரிய பயனாளிகளுக்கு நிவாரண தொகை சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள நிலுவை தொகை, விவசாயிகளுக்குதான் வழங்கப்படும். திருப்பி அனுப்புவது தொடர்பாக இதுவரை தகவல் இல்லை, என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**05.07.2013**

## மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி கடலூரில் மாணவர்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

பதிவு செய்த நேரம்:2013-07-04 12:45:44

கடலூர்: பொதுமக்களிடம் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வினை உருவாக்கும் வகையில் கடலூரில் நேற்று மாணவ மாணவிகளின் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.கடலூர் வேணுகோபாலபுரம் அரசுமேல்நிலைப்பள்ளி, புனிதஅன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, நகராட்சி மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பள்ளி களை சேர்ந்த ஆயிரத் துக்கும் மேற்பட்ட மாணவர் மாணவியர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் கிர்லோஷ்குமார் ஊர்வலத்தை துவக்கி வைத்தார். சேர்மன் சுப்ர மணியன், ஆணையர் காளிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊர்வலம் பாரதிசாலை, அண்ணாபாலம், உழவர்சந்தை வழியாகச் சென்று அரசு பணிமனை எதிரில் நிறைவடைந்தது. அப்போது மழைநீர்சேகரிப்பு விழிப்புணர்வு அட்டைகளை ஏந்தியபடி சென்றனர்.

நகர மன்ற உறுப்பினர்கள் கந்தன், பால கிருஷ்ணன், சங்கர், சேகர், ராஜேந்திரன், விஜயலட்சுமி, சாபிரா, சுகந்தி ரோட்டரிமிட்டவுன் சங்க நிர்வாக பொறியாளர் மணிகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இது குறித்து சேர்மன் சுப்ரமணியன் கூறுகையில், மழை நீர் சேகரிப்பை அமல்படுத்த வார்டுகள் தோறும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் வீடுகள் தோறும் மழை நீர் கட்டமைப்புகளை ஆய்வு செய்து அவற்றை சீரமைக்கவும் அல்லது புதிதாக அமைக்கவும் நடவடிக்கை எடுப்பார்கள். விரைவில் கடலூர் நகராட்சியில் 100 சதவீத மழைநீர் சேகரிப்பு நகராட்சியாக மாறும். என்றார்.

## குறுவை சாகுபடி விழிப்புணர்வு கூட்டம்

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் அருகே குணவாசல் வேளாண்துறை சார்பில் தமிழக அரசு அறிவித்துள்ள குறுவை நெல் சாகுபடி

சிறப்பு தொகுப்பு திட்ட செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் விஜய ராகவன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் கனகசபை முன்னிலை வகித்தார். இதில் தமிழக அரசு அறிவித்துள்ள 200 கிலோ ஜிப்சம், 5 கிலோ நெல் நுண்ணூட்டம், உயிர் பூச்சிக்கொல்லி மருந்து, உயிர் உரம், 150 மீட்டர் பைப் ஆகியன குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் வழங்கப்படும் என்று தெரிவித்தனர். மேலும் திட்டங்களில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் கணினி சிட்டா, அடங்கல், நிலவரைபடம், ஆழ்குழாய் கிணறு, மின் இணைப்பு, ஆயில் இன்ஜீன் பாசனம், குடும்ப அட்டை நகல் உள்ளிட்ட ஆவணங்களை அளித்து பயன்பெறலாம். கூட்டத்தில் அட்மா தொழில்நுட்ப மேலாளர் கதிர்காமன், உதவி வேளாண்மை அலுவலர்கள் குணச்சந்திரன்,

பாரதிதாசன், திருமுருகன், அட்மா பாலமுருகன், ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி அலுவ லர் அருண் நன்றி கூறினார்.

**கால்நடை மருத்துவமனை அமைக்க கோரிக்கை**

ஸ்ரீமுஷ்ணம்: ஸ்ரீமுஷ்ணம் அருகே வலசகாடு பகுதியில் 2000க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இதனால் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு போதிய மருத்துவமனை இல்லாததால் 5கி.மீ தொலைவில் உள்ள சோழத்தரம் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் அவசர காலங்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் கால்நடைகள் மட்டுமின்றி பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு வலசகாடு பகுதியில் பகுதிநேர மருத்துவமனை அமைத்துத்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

## வெலிங்டன் ஏரி வறண்டது நீர்மட்டம் குறைந்ததால் தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதி

திட்டக்குடி: திட்டக்குடி தாலுகாவில் வெலிங்டன் ஏரி உள்ளது. இந்த ஏரியின் மூலம் திட்டக்குடி விருத்தாசலம் தாலுக்காவில் உள்ள சுமார் 24 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது. கடந்த சில ஆண்டுகளாக கரை பலவீனமாக இருந்ததால் கரையை செப்பனிடும் பணி நடந்தது. இந்நிலையில் கடந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் நீர் இல்லாமல் வறண்டதால், நிலத்தடி

நீர் மட்டம் குறைந்து இருந்தது. திட்டக்குடியில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் கைப்பம்பிற்கு 15 முதல் 60 அடியும், 1 எச்.பி மோட்டார் அமைக்க 60 அடியும், தரை கிணற்றில் 20 அடியிலும், விவசாய போர் வெல் 70 அடியிலும் நீர் கிடைக்கப்பெற்று போதிய பாசன வசதி பெற முடிந்தது.

ஆனால் தற்பொழுது கைப்பம்பிற்கு குறைந்தது 110 அடியும், போர்வெல்லுக்கு 300 அடிக்கு மேல் சென்றால் தான் தண்ணீர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. திட்டக்குடி, விருத்தாசலம் தாலுகாவில் வெலிங்டன் பாசனம் பொய்த்ததாலும், பருவ மழை விவசாயிகளை ஏமாற்றியதாலும் நீர் மட்டம் குறைந்தது. மூன்று போகம் நெல் சாகுபடி செய்த விவசாயிகள் குறைவாக தண்ணீர் வருவதை கண்டு போர்வெல் மூலம் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்த கரும்பிற்கும் தொடர் மின் வெட்டாலும், மும்முனை மின்சாரம் சரியாக விநியோகம் செய்யாததாலும் கூலி தொழிலாளர்கள் கிடைக்காததால் கரும்பு பயிர் பாதிக்கும் நிலையில் பல விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கு தாரை வார்க்கும் அவல நிலை உள்ளது. மேலும் விவசாயம் செய்யா மல் வெற்றிடமாக இருக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் நிலம் உள்ள விவசாயிகள் வெளிநாட்டிற்கு பிழைப்பு தேடி சென்றுள்ளனர். அதேபோல் நெல், கரும்பு சாகுபடி குறைந்துள்ளதால் விவசாய கூலி தொழிலாளர்கள் வெளி மாநிலங்களுக்கும், திருப்பூர், சென்னை, திருச்சி ஆகிய பெரு நகரங்களுக்கும் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே விவசாயிகளின் நிலை கருதி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த சில சமூக விரோதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குளம், குட்டை, ஏரி ஆகியவற்றை தூர்வாரி வரும் பருவ மழையின் போது நீர் தேக்கினால் மட்டுமே விவசாயம் செய்யவும் நிலமற்ற கூலி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் பெற உதவும். இதற்கு மாவட்ட நிர்வாகம், பொது பணித்துறை அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் கூலி தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**அன்னாசி பழம் விலை சரிவு மக்கள் மகிழ்ச்சி**

திட்டக்குடி: திட்டக்குடி பகுதியில் கேரள அன்னாசி பழம் வருகையால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கேரளாவில் தற்பொழுது அன்னாசி பழம் அதிக அளவில் விளைச்சல் ஏற்பட்டுள்ளது. அங்கு அன்னாசி பழம் விலை கடும் வீழச்சியை

சந்தித்துள்ளது. அதிக அளவில் விளைச்சல் ஏற்பட்டுள்ளதால் கேரள பகுதியில் விற்பனை செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.
இதனால் கேரள விவசாயிகள் அன்னாசி பழங்களை லாரிகளில் கொண்டு வந்து தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரா ஆகிய மாநிலங்களில்  விற்கின்றனர். ஒரு அன்னாசி பழம் 10 முதல் 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பொது மக்கள், பழக்கடை உரிமையாளர்கள் பழங்களை மொத்தமாக வாங்கி செல்கின்றனர்.

**மேட்டூர் அணை நீர்பிடிப்பு பகுதியில் எள் செடியை அவசரமாக பிடுங்கும் விவசாயிகள்**

மேட்டூர், :  மேட்டூர் அணை நீர்மட்டம் 45 அடியாக அதிகரித்துள்ளதால் நீர்பிடிப்பு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எள் செடிகளை அவசரம், அவசரமாக விவசாயிகள் பிடுங்கி வருகின்றனர்.
மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரியும் சமயங்களில் பண்ணவாடி, மாசிலாபாளையம், மூலக்காடு உள்ளிட்ட பகுதிகளில் வசித்து வரும் விவசாயிகள் நீர்பிடிப்பு பகுதிகளில் விவசாயம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதன்படி, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக சரிந்ததை தொடர்ந்து நீர்மட்டமும் குறைந்ததால் எள், சோளம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்திருந்தனர்.
பங்குனி பட்டத்தில் விதைக்கப்பட்ட எள் நன்றாக வளர்ந்து, பூ பூத்து காய் பிடிக்கும் தருவாயில் இருந்தது. இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் பெய்த பருவமழையால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்தது. நீர்மட்டம் 45 அடியை தாண்டியுள்ளதால் நீர்த்தேக்க பகுதியில் சாகுபடி செய்துள்ள பயிர்கள் தண்ணீரில் மூழ்க தொடங்கியுள்ளன.
இதையடுத்து, சாகுபடி பயிர்களில் மகசூல் பெற முடியாத நிலையில், கால்நடைகளுக்காவது பயன்படுத்தலாம் என்ற அவசரத்தில் சோளம், எள் செடிகளை பிடுங்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டியுள்ளனர். தற்போது, சுமார் 100 ஏக்கரில் மகசூலுக்கு முன்னதாகவே எள் செடிகளை பிடுங்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

### மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மேலும் இரண்டு லட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன

நங்கவள்ளி, : சேலம், தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே பரந்து விரிந்து காணப்படும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிந்ததால் மீன் வளம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், நீர்வரத்து அதிகரித்ததால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 45.88 அடியாக உயர்ந்துள்ளது. நீர்மட்டம் அதிகரித்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் 3 லட்சத்து 24 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

நேற்று மீண்டும் ரோகு ஒரு லட்சம், மிர்கால் ஒரு லட்சம் என இரண்டு லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன. மீன் வளத்துறை உற்பத்தி நிலையம் சார்பில் பாலிதின் பைகளில் அடைத்து கொண்டு வரப்பட்ட இந்த மீன் குஞ்சுகளை மாசிலாபாளையம் கோம்புதிட்டு பகுதி யில் அணையில் விட்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: மேட்டூர் அணையில் மீன் வளம் குறைந்துள்ளது. தற்போது, நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் மீண்டும் அணையில் மீன் வளத்தை பெருக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மேட்டூர் அணை அருகில் உள்ள மீன் விதைப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளை நீர்த்தேக்க பகுதியில் கொண்டு வந்து விடப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

### நீர் வரத்து அதிகரித்ததால் மேட்டூர் அணையின் நீர் தேக்க பகுதியில் 3.20 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டது

மேட்டூர், : மேட்டூர் அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மீன் வளத்துறை சார்பில் 3.20 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

மேட்டூர் அணையின் நீர் தேக்க பகுதியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கும். இந்த நீர் பிடிப்பு பகுதியில் மீன் வளத்துறை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் மீன் குஞ்சுகள் விடப்படுகிறது. மீன் விதைப்பண்ணையில் செயற்கை தூண்டுதல் முறையில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளை அதிகாரிகள் அணையின் விடுவார்கள். லைசென்ஸ் பெற்ற மீனவர்கள், வளர்ந்த மீன்களை பிடித்து அங்குள்ள கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மீன் குஞ்சுகள் அணையின் நீர் பிடிப்பு பகுதியில் விடப்படும். இந்த ஆண்டு கடுமையான வறட்சி காரணமாக நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால் மீன் குஞ்சுகள் விடப்படவில்லை.

இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பொழிவு அதிகரித்ததால் கர்நாடகாவில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணைக்கு வந்த உபரி நீர் காவிரியில் திறந்து விடப்பட்டது. இதனால், கடந்த ஒரு வாரமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருந்தது. நேற்று அணையின் நீர்மட்டம் 44.78 அடியாக இருந்தது.

அணையின் நீர் மட்டம் அதிகரித்ததை தொடர்ந்து மீன் குஞ்சுகளை விட மீன் வளத்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர். மாசிலாபாளையம் நீர் பிடிப்பு பகுதியில் மீனவர்கள் முன்னிலையில் மீன் குஞ்சுகள் தண்ணீரில் விடப்பட்டது. ஒரு லட்சத்து 80 ஆயிரம் மிர்கால், ஒரு லட்சத்து 4 ஆயிரம் ரோகு உள்ளிட்ட 3.20 லட்சம் மீன் குஞ்சுகளை அதிகாரிகள் நீர் பிடிப்பு பகுதியில் விட்டனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு மாதம் கலைநிகழ்ச்சி**

சேலம், :சேலம் மாநகர பகுதியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த ஒரு மாதம் கலைநிகழ்ச்சிகள் நடக்கிறது.

சேலம் மாநகர பகுதியில் மழைநீரை சேகரிப்பது குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் மாநகராட்சி நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இதில், மதுரையை சேர்ந்த 2 கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சிகளை தினசரி மாலை வேளையில் மக்கள் கூடும் இடங்களில் நடத்திட ஏற்பாடு செய்துள்ளனர். இதன்படி இன்று (3ம் தேதி) முதல் வரும் 30ம் தேதி வரை மாநகர் முழுவதும் 60 வார்டுகளிலும் முக்கிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு குறித்த கலைநிகழ்ச்சிகள் நடக்கிறது.

இந்த கலைநிகழ்ச்சியில் ஆடல், பாடல், உரையாடல் ஆகியவற்றை 10 பேர் கொண்ட குழுவினர் செய்கின்றனர். அவர்கள், மழைநீரின் அவசியம் குறித்தும், அதனை சேகரிப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்திட முடியும் என்றும் வலியுறுத்த உள்ளனர். இந்த கலைக்குழுவின் நிகழ்ச்சிகள், இன்று மாலை 5 மணிக்கு சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட ரெட்டிப்பட்டி மாரியம்மன் கோயில் பகுதியில் துவங்குகிறது.

இதேபோல் இன்று மாலை, குரங்குச்சாவடி சந்தை, சிவாயநகர் ஏரிக்கரை சாலை, மெய்யனூர் ரோடு வார்டு அலுவலகம் முன்பு, காசக்காரனூர், அம்மாபேட்டை குப்பைமேடு எதிரே, அழகாபுரம் திரவுபதியம்மன் கோயில் முன்பு, கொண்டலாம்பட்டி சிங்காரமுனியப்பன் கோயில் முன்பு என மொத்தம் 8 இடத்தில்

நடக்கிறது.
இதுபற்றி மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், ''சேலம் மாநகர மக்களிடம் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை கலைநிகழ்ச்சிகள் மூலம் ஏற்படுத்துகிறோம். 2 கலைக்குழுவினர் ஒரு மாத காலத்திற்கு 60 வார்டுகளிலும் பிரசாரம் செய்யவுள்ளனர்,'' என்றனர்.

**வெண்டை சாகுபடியில் அதிக மகசூல் பெற வேளாண்துறை யோசனை**

ராசிபுரம், : வெண்டை சாகுபடியில் அதிக மகசூல் பெறும் வழிமுறை குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
ராசிபுரம் பகுதிகளில் ஆங்காங்கே பரவலாக பெய்து வரும் மழைநீரை பயன்படுத்தி விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்து வருகின்றனர். அவ்வாறு சாகுபடி செய்யும் போது கோ 1, கோ 2, கோ 3, அர்கா அனாமிகா, யு.எஸ். 7019 சக்தி, ராசி 20 உள்ளிட்ட உயர்ரக ஒட்டு வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 7.5 கிலோ விதை போதுமானது. கிலோவுக்கு 4 கிராம் கேப்டான் அல்லது 2 கிராம் கார்பன்டசிம் கலந்து விதைக்க வேண்டும். விதைக்கு 45க்கு 30 செ.மீ., இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். விதைக்கும் முன்பு தழை, மணி, சாம்பல் முறையே 20, 50, 30 கிலோ வீதம் உரமிட வேண்டும். நடவு செய்வதற்கு முன்பு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பேக்டீரியா இரண்டையும் 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். விதைத்த ஒரு மாதத்துக்குள் 20 கிலோ தழைச்சத்து இடவேண்டும். 1 சதவீதம் யூரியா கரைசலை 20வது நாளில் இருந்து 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேணடும்.
ஒரு லிட்டர் நீருக்கு 17 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து 30, 45, 60வது நாளில் தெளிக்க வேண்டும். ஹெக்டேருக்கு ஆக்ஸிபுளோர்பென் 1.25 லிட்டர் தண்ணில் கலந்து தெளிக்க வேண்டும். வெண்டை விதைத்து 30 நாளில் களை எடுக்க வேண்டும்.
காய்கள் பிடிக்க துவங்கும்போது காய் துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். 1 லட்சம் எண்கள் கொண்ட டிரைக்கோ கிரமம்மா தெளிக்கலாம்.

**சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு பேரணி**

நாமக்கல், : நாமக்கல் அரசு ஆண்கள் தெற்கு மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி, மாணவர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. அனைவருக்கும் கல்வி இயக்க முதன்மைக்கல்வி அலுவலர் கோபிதாஸ் பேரணியை தொடங்கி வைத்தார். பள்ளி தலைமை ஆசிரியர் அல்லிமுத்து, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் மகேஸ்குமார், பள்ளி சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்கள் சித்ரா, அன்புச்செழியன், தொழிற்கல்வி ஆசிரியர் முத்துசாமி மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் கலந்து கொண்டனர். பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பள்ளியை அடைந்தது.

பேரணியில் கலந்து கொண்ட மாணவர்கள் சுற்றுச்சூழலின் அவசியம் குறித்த, விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் குமார் சுற்றுச்சூழலை பாதுகாப்பதின் அவசியம் குறித்து, பள்ளி மாணவர்களிடையே பேசினார்.

**நிலத்தடி நீர் மாசடைவதை தடுக்க இலக்கியம்பட்டி ஏரியை தூர்வார கோரிக்கை**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம் இலக்கியம்பட்டி ஏரியை தூர்வாரி நிலத்தடி நீர்மட்டம் மாசு ஏற்படா வண்ணம் காப்பாற்ற வேண்டும் என அப்பகுதி மக்கள் பஞ்சாயத்து நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தின் மிகப்பெரிய பஞ்சாயத்து இலக்கியம்பட்டி. தர்மபுரி நகராட்சியை ஒட்டியுள்ள, இலக்கியம்பட்டி பஞ்சாயத்தில், ஏராளமான குடியிருப்புகள் மற்றும் அரசு, தனியார் அலுவலகங்கள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக செந்தில் நகர், இலக்கியம்பட்டி உள்ளிட்ட குடியிருப்பு பகுதியில் தேங்கும் பிளாஸ்டிக் கழிவுகள் இலக்கியம்படி ஏரிக்கரையிலும், ஏரியிலும் துப்புரவு பணியாளர்கள் கொட்டி வருகின்றனர். இக்கழிவுகள் காற்று மற்றும் மழை காரணமாக தற்போது அதிகளவில் ஏரிக்கு தண்ணீர் செல்லும் பகுதியிலும், ஏரிக்குள்ளும் நிறைந்து காணப்படுகிறது.

மேலும், இப்பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரும் ஏரியில் நேரடியாக கலப்பதால், ஏரியை ஒட்டிய பகுதிகளில் நிலத்தடி நீரின் தன்மை பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக

இலக்கியம்பட்டி ஏரியில் தேங்கியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை.
எனவே, இலக்கியம்பட்டி பஞ்சாயத்து மற்றும் மாவட்ட நிர்வாகம் காலதாமதமின்றி ஏரியில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவும், குடியிருப்பு பகுதியில் இருந்து சாக்கடை கழிவுநீர் நேரடியாக ஏரியில் கலப்பதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இதேபோன்று வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் ஏரியில் கொட்டப்படுவதுடன், பல கோழிக்கடை உரிமையாளர்கள் கோழிக்கழிவுகளையும் கொட்டி வருவதால் கடும் துர்நாற்றம் ஏற்பட்ட வருகிறது. இதை தடுக்க மாவட்ட நிர்வாகம் இலக்கியம்பட்டி பஞ்சாயத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## விவசாயிகள் பயன் பெறும் வகையில் தோட்டக்கலைத்துறையிடம் பண்ணை ஒப்படைப்பு

தர்மபுரி, : போளையம்பள்ளி தோட்டக்கலை பண்ணையை தோட்டக்கலைத் துறையிடம் கலெக்டர் ஒப்படைத்தார்.
தர்மபுரி மாவட்டம் போளையம்பள்ளியில் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தோட்டக்கலை பண்ணையை தோட்டக்கலைத்துறைக்கு கலெக்டர் லில்லி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வீரணன் முன்னிலையில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் கலைச்செல்வியிடம் ஒப்படைத்தார்.
நிகழ்ச்சியின்போது கலெக்டர் பேசியதாவது:
தர்மபுரி மாவட்ட மேம்பாட்டு கழகத்தின் சார்பில் போளையம்பள்ளியில் தோட்டக்கலை பண்ணை கடந்த 1991ம் ஆண்டு 6.75 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு, பராமரிப்பு செய்யப்பட்டு வந்தது. பின்னர் ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் உள்ள தர்மபுரி மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு சங்கத்திற்கு கடந்த 2003ம் ஆண்டு மாற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.
தற்போது தர்மபுரி மாவட்ட விவசாயிகள் வீரிய ஒட்டு செடிகள் மற்றும் பல்வேறு நாற்றுக்களை வெளி மாவட்டங்கில் இருந்து வாங்கி வருகின்றனர்.
தர்மபுரி மாவட்டத்திலேயே நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வீரிய ஒட்டுச் செடிகளையும், பல்வேறு பயிர்களின் நாற்றுகளையும் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி, அவர்கள் பயன் பெறும் விதமாக இந்த பண்ணையை

தோட்டக்கலைத்துறைக்கு மாற்றம் செய்ய தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடந்த கலெக்டர்கள் மாநாட்டில் கோரிக் கை வைக்கப்பட்டது. இதையடுத்து தமிழக முதல்வர் அந்த கோரிக்கையை ஏற்று, இந்த பண்ணையை தோட்டக்கலைத்துறைக்கு மாற்றி அறிவித்தார். அரசு உத்தரவின்படி இந்த பண்ணை தமிழ்நாடு சமூக பொருளாதார மேம்பாட்டு சங்கத்திலிருந்து தோட்டக்கலைத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்காக தோட்டக்கலைத்துறையிலிருந்து தர்மபுரி மாவட்ட பொருளாதார மேம்பாட்டு சங்கத்திற்கு `9 லட்சத்து 27 ஆயிரத்து 800 வழங்கப்பட்டுள்ளது.

இந்த பண்ணையில் தற்போது மாமரம், சப் போட்டா, புளி, மாதுளை, நாவல் உள்ளிட்ட பல்வகை மரங்கள் உள்ளன. இங்கு பணியாற்றும் நபர்கள் அனைவருக்கும் வேலை பாதுகாப்பு வழங்கிடும் வகையில் தோட்டக்கலைத்துறையில் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர். இந்த பண்ணையில் தோட்டக்கலைத்துறையின் மூலம் நவீன ஒட்டுச்செடிகள் மற்றும் நாற்றுகள் உற்பத்தி செய்வதன் மூலம்  தர்மபுரி மாவட்ட விவசாயிகள் பயனடையலாம். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

நிகழ்ச்சியில் அரூர் ஆர்டிஓ சந்திரசேகரன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) செல்வம், தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் பாஸ்கர், முகுந்தன், ராஜேந்திரன், தோட்டக்கலை அலுவலர்கள் தீபா, பாத்திமா, ஆசைத்தம்பி, ஊராட்சி மன்ற தலைவர் சக்தி மாது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கிராம பகுதிகளில் 100 சதவீதம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அறிவுறுத்தல்**

தர்மபுரி, : கிராம பகுதிகளில் உள்ள வீடுகளில் 100 சதவீதம் மழை நீர் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று, தர்மபுரியில் நடந்த மழைநீர் சேகரிப்பு கருத்தரங்கில், ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தர்மபுரியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ஊராட்சி தலைவர்களுக்கான மழை நீர் சேகரிப்பு குறித்து கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வீரணன் தொடங்கி வைத்து பேசியதாவது:

ஒவ்வொரு மழைத்துளி நீரையும் நாம் சேகரிக்க வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மாதிரி அமைப்பை பின்பற்றி மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை  ஒவ்வொரு குடியிருப்புகளிலும்,

கட்டடங்களிலும் ஏற்படுத்த வேண்டும். நிலத்தடி நீரை இதன் மூலம் நாம் உயர செய்ய முடியும்.
இது குறித்து முழு விவரங்களையும் ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிந்து கொண்டு அதை மக்களிடத்தில் கொண்டு சென்று 100 சதவீதம் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி, மழை நீரை சேகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.
நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் நவநீதன், நிர்வாக பொறியாளர் சபாநாயகம், துணை நிலைநீர் வல்லுநர் இளங்கோமன்னன், உதவி நிலநீர் வல்லுநர் ராதிகா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ராமு ஆகியோர் கலந்துகொண்டு மழைநீர் சேகரிப்பு குறித்து விளக்கவுரை ஆற்றினர்.அரூர் ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் கூட்டம் அரூர், : அரூர் ஒன்றிய, பேரூர் கழகத்தின் சார்பில் அதிமுக செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் நாளை (5ம் தேதி) மாலை 3 மணியளவில் மோபிரிப்பட்டியில் உள்ள என்ஆர்வி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதற்கு ஒன்றிய அவைத்தலைவர் பாண்டுரங்கன் தலைமை வகிக்கிறார். நகர செயலாளர் ராசா வரவேற்கிறார். உயர்கல்வி துறை அமைச்சர் பழனியப்பன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் அன்பழகன், மாவட்ட செய லாளர் அன்பழகன் எம்எல்ஏ ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். இதில் அனை வரும் கலந்து கொள்ளுமாறு ஒன்றிய செயலாளர் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்ட இணைப்பு இல்லை மாக்கனூர் கிராமத்தில் குடிநீர் பிரச்னையால் மக்கள் அவதி

பாப்பாரப்பட்டி, : மாக்கனூர் கிராமத்தில் மக்கள் குடிநீர் பிரச்னையால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.
பென்னாகரம் ஒன்றியம் ஓ.ஜி.அள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட மாக்கனூர் கிராமத்தில் 300 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் கடும் குடிநீர் பிரச்னையால் அவதிப்பட்டு வருகின்றனர். அப்பகுதி மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக குளக்கரை அருகே ஊராட்சிக்கு சொந்தமான போர்வெல் உள்ளது. இங்குதான் கிராம மக்கள் தண்ணீர் பிடித்து வருகின்றனர். 10 குடம் நிறைந்தால், போர்வெல்லில் தண்ணீர் வற்றிவிடும். மீண்டும் சிறிது நேரம் கழித்துத்தான் மின்மோட்டார் போடப்பட்டு தண்ணீர் வரும். இதனால் மக்கள் நீருக்கான நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.
மேலும், மாக்கனூர் கிராமத்திற்கு அருகே மாங்காபட்டி கிராமத்தில் உள்ள ஏரியில்

குடிநீருக்காக கிணறு வெட்டப்பட்டு அங்கிருந்து குழாய் மூலம் மாக்கனூர் கிராமத்திற்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டு கிராமம் முழுவதும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது அந்த கிணற்றிலும் தண்ணீர் வற்றியதால், மாக்கனூருக்கு தண்ணீர் வருவதில்லை.

இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்னையால், கிராம மக்கள் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆண்டியூர், கானாபட்டி மேல்கொட்டாய் கிராமங்களுக்கு சென்று அங்குள்ள விவசாய கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டிய நிலை உள்ளது.

தற்போது, தர்மபுரியில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் துவக்கப்பட்டும், இந்த கிராமத்திற்கு குடிநீர் இணைப்பு இன்னும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

**காவிரி நீர் பிரச்னையில் மத்திய அரசு ஏமாற்றுகிறது அகில இந்திய விவசாயிகள் சங்கம் குற்றச்சாட்டு**

தர்மபுரி, : அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33வது அகில இந்திய மாநாட்டிற்கான நிதியளிப்பு பேரவை கூட்டம் தர்மபுரியில் நேற்று நடந்தது. கூட்டத்தில் வரவேற்புக்குழு தலைவர் இளம்பரிதி தலைமை வகித்தார். அகில இந்திய பொதுசெயலாளர் வரதராஜன், மாநில துணை தலைவர் ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநிலக்குழு டெல்லி பாபு, சிபிஎம் மாவட்ட செயலாளர் மாரிமுத்து, மாவட்ட தலைவர் ஆறுமுகம், செயலாளர் மல்லையன், மாவட்ட பொருளாளர் குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து சங்க பொதுச்செயலாளர் வரதராஜன் நிருபர்களிடம் கூறியதாவது: அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33வது அகில இந்திய மாநாடு வரும் 24ம் தேதி முதல் 27ம் தேதி வரை கடலூரில் நடக்கிறது. இதில் விவசாயிகளின் கோரிக்கைளை வலியுறுத்தி சுமார் 2 லட்சம் பேர் கலந்து கொள்கின்றனர். மாநாட்டில் திரிபுரா மாணிக் சர்க்கார் உள்பட முக்கிய தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்தியாவில் ஒரே ஆண்டில் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒரு நாளைக்கு 50 பேர் வீதம், ஒரு மணிக்கு 2 பேர் வீதம் தற்கொலை செய்துள்ளனர். எங்களது ஆய்வில் 43 சதவீத விவசாயிகள், விவசாய வேலையை விட்டு வெளியேறுவதாக கருத்து தெரிவித்துள்ளனர்.ம்.

சுவாமிநாதன் அறிக்கைக்கு நேர் எதிராக இந்திய அரசு நடந்து கொள்கிறது. சுவாமிநாதன் அறிக்கையில் உரம், விதை, பூச்சி மருந்து, மின் கட்டணம் உள்ளிட்ட இடுபொருட்களின் விலையை குறைக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசோ நேர் எதிராக இடுபொருட்களின் விலை நிர்ணயத்தை அந்நிய நாட்டு நிறுவனங்களின் கைகளில் ஒப்படைத்துள்ளது. இடுபொருட்களின் விலை உயர்வால் விவசாய செலவு 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. இதனால் தான் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். தர்மபுரி உள்பட பெரும்பாலான மாவட்டங்களில் விவசாயிகளுக்கு வங்கி கடன் கிடைப்பதில்லை. கடன் வாங்கும் போது பயிருக்கு இன்சூரன்ஸ் பணம் வசூல் செய்கின்றனர். ஆனால் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் எதுவும் இழப்பீடு தருவதில்லை. இழப்பீட்டை யாரிடம் வாங்குவது என்றும் விவசாயிகளுக்கு தெரிவதில்லை.  எங்களால் மட்டும் விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்க முடியாது என்பதால், அனைத்து விவசாயிகள் சங்கத்தையும் ஒருங்கிணைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என தீர்மானித்துள்ளோம். இதற்கு வியாபாரிகள் சங்கமும் ஆதரவு தந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் சில தினங்கள் கடையடைப்பு போரா ட்டம் நடத்த உள்ளோம். இனிமேல் விவசாயிகள் தண்ணீரை கூட விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படும். காவிரி நதிநீர் பிரச்னை, இரு மாநில மக்களிடையே மோதலை ஏற்படுத்த கூடாது. இதன் மூலம் அரசியல் லாபம் தேடக் கூடாது. காவிரி நதிநீர் பிரச்னையில், பிரச்னையை தீர்க்க வேண்டிய மத்திய அரசு ஏமாற்றுகிறது. அது தன் நிலையில் இருந்து தவறி இருக்கிறது. இவ்வாறு வரதராஜன் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**05.07.2013**

## தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு

சென்னை,

தென்மேற்கு பருவமழை கர்நாடகம், கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தீவிரம் அடைந்துள்ளது. குறிப்பாக கர்நாடகத்தில் தான் அநேக இடங்களில் மழைபெய்து வருகிறது.தமிழ்நாட்டில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் தான் தொடர்ந்து கடந்த சில நாட்களாக மழைபெய்கிறது. இன்று (வெள்ளிக்கிழமை) தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது. நேற்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் முடிவடைந்த மழை அளவு வருமாறு:– வால்பாறை 7 செ.மீ., தேவலா 6 செ.மீ., நடுவட்டம் 5 செ.மீ., கூடலூர் பஜார் 4 செ.மீ., சின்னக்கல்லார் 3 செ.மீ., செங்கோட்டை 2 செ.மீ., பூதப்பாண்டி, பொள்ளாச்சி, கெட்டி, குந்தாபாலம் தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

## கர்நாடகத்தில் மீண்டும் மழை பெய்வதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு

மேட்டூர்,

கர்நாடகத்தில் மீண்டும் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## மழை தீவிரம்

கர்நாடக மாநிலத்தில் கடந்த மாதம் மழை தீவிரம் அடைந்ததால் அந்த மாநிலத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர், கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகமானது. இதனால் இந்த அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவ்வாறு திறக்கப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணையை வந்தடைந்தது. இதன்காரணமாக கடந்த ஒரு வாரமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அதாவது அணைக்கு வினாடிக்கு அதிகபட்சமாக 38 ஆயிரத்து 500 கனஅடி வரை தண்ணீர் வந்தது. இந்தநிலையில், கடந்த 5 நாட்களுக்கு முன்பு கர்நாடகத்தில் மழை நின்றதால் அங்குள்ள அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. இதன் எதிரொலியாக மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து படிப்படியாக குறைந்து கொண்டே வந்தது. நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

## நீர்வரத்து அதிகரிப்பு

இந்தநிலையில், கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் ஆகிய அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த 2 நாட்களாக மீண்டும் பருவமழை தீவிரம் அடைந்து உள்ளதால் இந்த அணைக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இதன்காரணமாக கபினி அணையில் இருந்து வினாடிக்கு 45,000 கனஅடியும், கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.) அணையில் இருந்து வினாடிக்கு 1,500 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இவ்வாறு திறக்கப்பட்ட தண்ணீர் இன்று (வெள்ளிக்கிழமை) மேட்டூர் அணையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே மேட்டூர் அணைக்கு இன்று முதல் மீண்டும் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

<u>நீர்மட்டம்</u>

நேற்று மாலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 46.62 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 6,150 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி தண்ணீர் தமிழக எல்லைக்கு இன்று வருகை பொதுப்பணித்துறை, குடிநீர் அதிகாரிகள் தகவல்**

சென்னை,

கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி, சென்னை குடிநீர் தேவைக்காக கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் (வெள்ளிக்கிழமை) தமிழக எல்லையான ஜீரோ பாயிண்டுக்கு இன்று நள்ளிரவு வருகிறது.

<u>கிருஷ்ணா நதி நீர்</u>

இதுகுறித்து பொதுப்பணித்துறை மற்றும் மெட்ரோ குடிநீர் துறை அதிகாரிகள் கூறியதாவது:– சென்னை நகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது பூண்டி ஏரி. 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவும், 35 அடி உயரம் கொண்ட இந்த ஏரியில் தற்போது 200 கன அடி மட்டும் தண்ணீர் உள்ளது. அதேபோல் 3,300 மில்லியன் கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் 453 மில்லியன் கன அடியும், 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் 736 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே உள்ளது.

<u>சென்னை குடிநீர்</u>

சென்னை மாநகரத்தின் குடிநீர்த் தேவைக்காக, தமிழகம் – ஆந்திர மாநிலங்களுக்கிடையே 1983–ம் ஆண்டு ஏப்ரல் 18–ந்தேதி உருவாகிய ஒப்பந்தப்படி கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க முடிவு

செய்யப்பட்டது. கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து ஆண்டு தோறும் ஜுலை முதல் அக்டோபர் வரை 8 டி.எம்.சி. தண்ணீரும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டி.எம்.சி. தண்ணீர் உட்பட 12 டி.எம்.சி. தண்ணீரும் திறந்து விடப்பட வேண்டும். நடப்பாண்டு சென்னை மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைக்க ஏதுவாக ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு கிருஷ்ணா நீரை திறந்து விட வேண்டும் என்று ஆந்திர அரசுக்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதி வலியுறுத்தினார்.

கண்டலேறு அணை

அதன்படி நெல்லூர் அருகில் உள்ள கண்டலேறுவில் இருந்து சென்னை குடிநீர் தேவைக்காக 200 கன அடி தண்ணீர் கடந்த 1–ந்தேதி திறந்து விடப்பட்டது. இது படிப்படியாக 2 ஆயிரம் கன அடி வரை உயர்த்தி திறக்கப்பட உள்ளது. 152 கிலோ மீட்டர் தூரம் உள்ள தமிழக எல்லையான தாமரை குப்பத்தில் உள்ள ஜீரோ பாயிண்ட் பகுதிக்கு இன்று நள்ளிரவு அல்லது நாளை காலை தண்ணீர் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் வரும் வழியில் கால்வாய் கரைகள் உடைப்பு, தண்ணீர் ஆவியாகுதல், நீர் கசிவு, மோட்டார் போட்டு தண்ணீர் திருடும் கும்பல் போன்ற செயல்களால் நிர்ணயிக்கப்பட்ட நாளில் தண்ணீர் வருவதில்லை. ஜீரோ பாயிண்டுக்கு வந்த தண்ணீர் அங்கிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பூண்டி ஏரிக்கு, அடுத்த 24 மணிநேரம் கழித்து வருகிறது. இதனை மலர் தூவி வரவேற்போம். பின்னர் சென்னை மாநகர குடிநீர் தேவைக்கு தண்ணீர் முறையாக பயன்படுத்தப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் முதியோர் ஓய்வூதிய தொகையாக ரூ.16 கோடி வழங்கப்பட்டுள்ளது கலெக்டர் அலுவலகம் தகவல்**

வேலூர்

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் வேலூர் மாவட்டத்தில் முதியோர் ஓய்வூதிய தொகையாக ரூ.16 கோடி வழங்கப்பட்டுள்ளதாக கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

<u>உழவர்பாதுகாப்பு திட்டம்</u>

வேலூர் மாவட்டத்தில் முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் 2011–ன் கீழ் 1.4.2012 முதல் 31.3.2013 வரை உறுப்பினர் திருமணத்திற்காக 591 ஆண்களுக்கு ரூ.47 லட்சத்து 28 ஆயிரமும், 269 பெண்களுக்கு ரூ.26 லட்சத்து 90 ஆயிரமும் ஆக மொத்தம் 860 நபர்களுக்கு ரூ.74 லட்சத்து 18 ஆயிரமும் வழங்கப்பட்டது.

உறுப்பினரை சார்ந்தோர் திருமணத்திற்காக 2,210 ஆண்களுக்கு ஒரு கோடியே 76 லட்சத்து 80 ஆயிரம் ரூபாயும், 1,348 பெண்களுக்கு ஒரு கோடியே 34 லட்சத்து 80 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் ரூ.3,558 நபர்களுக்கு ரூ.3 கோடியே 11 லட்சத்து 60 ஆயிரமும், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்காக 3,041 நபர்களுக்கு ரூ.3 கோடியே 65 லட்சத்து 50 ஆயிரமும், விபத்து நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கிற்காக 148 நபர்களுக்கு ஒரு கோடியே 43 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாயும், கல்வி உதவித்தொகையாக 18,530 உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு ரூ.3 கோடியே 76 லட்சத்து 33 ஆயிரத்து 920–ம் வழங்கப்பட்டது. மொத்தம் 26,137 நபர்களுக்கு ரூ.12 கோடியே 71 லட்சத்து 54 ஆயிரத்து 420 உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

<u>ரூ.16 கோடி</u>

உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2011–ன் கீழ் முதியோர் ஓய்வூதியமாக 17,742 நபர்களுக்கு ரூ.16 கோடியே 37 லட்சத்து 38 ஆயிரத்து 740 வழங்கப்பட்டது.

ஆதரவற்ற விவசாய கூலி உதவித்தொகை 71,187 நபர்களுக்கு ரூ.88 கோடியே 26 லட்சத்து 84 ஆயிரத்து 290–மும், காசநோய், புற்றுநோய் எச்.ஐ.வி., எய்ட்ஸ் உதவித்தொகையாக 246 நபர்களுக்கு ரூ.7 கோடியே 5 ஆயிரத்து 600–ம் என மொத்தம் 71,433 பேருக்கு ரூ.88 லட்சத்து 33 ஆயிரத்து 89, 890 உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் நல்ல வெப்பநிலை : 40 ஆண்டுகள் மகசூல் கொடுக்கும் எண்ணை பனையை விவசாயிகள் சாகுபடி செய்யலாம் வேளாண் அதிகாரிகள் தகவல்**

பிரம்மதேசம்

தமிழகத்தில் நல்ல வெப்பநிலை உள்ளதால் தொடர்ந்து 40 ஆண்டுகள் மகசூல் கொடுக்கும் எண்ணை பனையை விவசாயிகள் சாகுபடி செய்யலாம் என திண்டிவனம் அருகே பாமாயில் மரங்களை ஆய்வு செய்த குழுவினர் தெரிவித்தனர்.

**உயர்மட்ட குழுவினர் ஆய்வு**

திண்டிவனம் அருகே விட்டலாபுரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ராமதாஸ் தனது நிலத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் பாமாயில் சாகுபடி செய்துள்ளார். இதனை மத்திய அரசின் எண்ணைபனை ஆராய்ச்சி திட்டத்தின் இயக்குனர் மனோகரன், வேளாண்மை துணை இயக்குனர்கள் டாக்டர் பிரதாப், ராஜேந்திரன் ஆகியோரை கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அந்த குழு வினரிடம் விவசாயி ராமதாஸ் கூறுகையில், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு தரிசு நிலத்தை சீரமைத்து 5 ஏக்கரில் எண்ணை பனை சாகுபடி செய்தேன். அதை விரிவுபடுத்தி தற்போது 20 ஏக்கர் பரப்பளவில் எண்ணைபனை சாகுபடி செய்துள்ளேன். தொழிலாளர் பற்றாக்குறை உள்ள பெரிய விவசாயிகளுக்கு எண்ணைபனை சாகுபடி சிறந்தது. முதல் அறுவடையில் 2 ஆயிரம் கிலோ மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

**நல்ல மகசூல்**

வேளாண்மை துணை இயக்குனர் டாக்டர் பிரதாப் கூறுகையில், இந்திய அரசு சமையல் எண்ணை தேவையினை பூர்த்தி செய்திட ஆண்டிற்கு 100 மில்லியன் மெட்ரிக்டன் அளவுக்கு வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்கிறது. இதனால் பெருமளவு நாட்டின் அன்னிய செல வாணி வீணாகிறது. நமது நாட்டிலேயே பாமாயில் அதிகம் பயிரிட்டால் சமையல் எண்ணை தேவை பூர்த்தியாகும்.

தமிழகத்தில் எண்ணை பனை சாகுபடிக்கு உகந்த வெப்பநிலை நிலவுகிறது. நடவு செய்த 4 ஆண்டுகளில் இருந்து 40 ஆண்டுகள் வரை மகசூல் கொடுத்திடக்கூடிய எண்ணைபனையை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார். இந்த ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார், மண்டல மேலாளர் அண்ணாமலை, அசோகன், வேளாண்மை அலுவலர்கள் எத்திராஜ், சவுந்தரராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

**மழை பொய்த்த நிலையில் கிணறுகளும் வறண்டதால் விவசாயிகள் கவலை ஆடிப்பட்ட விதைப்பும் பின்னடைவாகும் நிலை**

அலங்காநல்லூர்,

தென்மேற்கு பருவமழை காலம் தொடங்கி ஒரு மாதம் ஆகியும் மதுரை மாவட்டத்தில் மழை பெய்யாததால் பாலமேடு, அலங்காநல்லூர், வாடிப்பட்டி பகுதியில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. மழை பெய்யாவிடில் ஆடிப்பட்ட விதைப்பும் பின்னடைவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

**<u>தென்மேற்கு பருவமழை</u>**

கடந்த மே மாத இறுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கியதாக அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் மேற்குதொடர்ச்சி மலையையொட்டியுள்ள பகுதியில் மட்டும் இந்த ஆண்டு நல்ல மழை பெய்து வருகிறது. ஒரு மாதம் முடிந்த

நிலையில் தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை 24 சதவீதம் அதிகம் பெய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மதுரை மாவட்டத்தில் வளமிக்கது என்று கருதப்படும் பெரியாறு அணை சாகுபடி பகுதியான வாடிப்பட்டி, அலங்காநல்லூர், பாலமேடு, மேலூர் பகுதியில் சாரல் மழை கூட பெய்யவில்லை. கோடைகாலத்திலும் இந்த பகுதியில் எதிர்பார்த்த கோடை மழையும் பெய்யாததால் கிணறுகளில் நீர்மட்டம் உயரவில்லை.

**<u>நீர்மட்டம் சரிவு</u>**

வழக்கமாக இந்த காலத்தில் முல்லைபெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்து அதன் எதிரொலியாக வைகை அணையிலும் போதுமான அளவு தண்ணீர் வந்து சேர்ந்து விடும். அதன்பின் பெரியாறு பாசன கால்வாய்களில் தண்ணீர் திறக்கப்பட்டு விவசாயம் நடைபெறும். கடந்த ஆண்டு 2 போகமும் பயிர் செய்ய முடியாமல் போய்விட்டது.

இந்த ஆண்டாவது மழை பெய்யும் என எதிர்பார்த்து விவசாயிகள் ஏமாற்றம் அடைந்ததுதான் மிச்சம். கிணற்று நீரை வைத்தாவது சாகுபடியை தொடங்கலாம் என்றால் கிணறுகளில் நீர்மட்டம் சரிந்து வருகிறது.

வருடந்தோறும் விவசாயிகள் ஆடிப்பட்ட விதைப்பை விரும்பி பலர் பயிர்சாகுபடியை தொடங்குவார்கள். இதனையொட்டி ஆனி மாதத்திலேயே உழவுப்பணிகளை மேற்கொண்டு நடவுக்கு தயாராக இருப்பார்கள். ஆனால் வறட்சி தொடர்வதால் ஆடிப்பட்ட விதைப்பு பின்னடைவு ஆகும் தருணத்தில் அமைவதாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தற்போது நிலக்கடலை பருப்பு, உளுந்து, பாசிப்பயறு, சோளம், கம்பு, காணை, குதிரைவாலி, சாமை உள்ளிட்ட பல மானாவாரி பயிர் வகைகளை கூட விதைக்க

முடியாமல் நிலத்தில் போதிய ஈரம் இல்லாமல் போனதால் விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

மழை பெய்யாதா என அவர்கள் ஏக்கத்தில் உள்ளனர்.

**கல்லல் வட்டாரத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை வேளாண்மை அதிகாரி தகவல்**

காரைக்குடி,

கல்லல் வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை வழங்கப்பட உள்ளது என்று வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**நெல் விதைகள்**

கல்லல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பயிர் சாகுபடிக்கு போதுமான அளவில் மழை பெய்யும் என வானிலை ஆராய்சி மையம் தெரிவித்துள்ளது. கடந்த ஜூன் மாதம் பெய்த மழையின் மூலம் விவசாயிகள் உழவு பணியினை மேற்கொண்டு வருகிறார்கள்.

சம்பா பருவத்திற்கு ஏற்ற ரகமான ஆடுதுறை 39 (கல்சர் பொன்னி) மற்றும் பிபிடி 5204 (டீலக்ஸ் பொன்னி) மற்றும் ஆடுதுறை 45 சான்று பெற்ற விதைகள் மற்றும் விதையுடன் கலந்து விதைத்திட சூடோனோஸ், உயிர் உரங்கள் போதுமான அளவில் கல்லல் மற்றும் குன்றக்குடி வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அனைத்து விதைகளுக்கும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் மானியம் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான பயிர்பாதுகாப்பு மருந்துகள், நெல் நுண்ணுரம், கைத்தெளிப்பான், விசைத்தெளிப்பான், கோனோவீடர், மார்க்கர், பவர் வீடர்

மற்றும் ஆயில் என்ஜின் ஆகியவை மானியத்தில் வழங்கப்படுகிறது. புஞ்சை நிலங்களில் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளுக்கு உளுந்து, மக்காசோளம் ஆகியவை நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

**<u>மானியம்</u>**

மேலும் மின்சார இணைப்பு கிடைக்காமல் ஆழ்துளை கிணறு அமைத்தும் சாகுபடி பணி மேற்கொள்ள இயலாத விவசாயிகளுக்கு சூரிய சக்தி மூலம் இயங்கும் ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இறைக்கும் எந்திரங்கள் 80 சதவீத மானியத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியமும், உழவு பணி முடித்து வரிசையில் நேரடியாக விதைப்பு செய்வோருக்கு உழவு மானியம் ஹெக்டேருக்கு ரூ.600, கரும்பு பயிரில் இடைவெளியில் இலைகளை வெட்டி பரப்பி மண் ஈரம் மற்றும் மண் வளம் பாதுகாக்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரமும் முன்னுரிமை அடிப்படையில் மானியமாக வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

**ஆற்றுப் பகுதிகளில் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் அமைக்க ரூ.47½ லட்சம் நிதி ஒதுக்கீடு**

நெல்லை

ஆற்றுப் பகுதிகளில் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் அமைக்க ரூ.47½ லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாக நெல்லை மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சொட்டு நீர் பாசனம்

நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கலிங்கலாறு, நிஷபநதி, தேவியாறு, அனுமன் நதி, கருமேனியாறு உபவடிநில பகுதிகளில் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனத்தை 119 எக்டேர் நிலத்தில், மானியத்தில் அமைக்க வேளாண்மை பொறியியல் துறைக்கு ரூ.47 லட்சத்து 60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனத்தை சிறுகுறு விவசாயிகள் 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகள் 75 சதவீத மானியத்திலும் அமைக்கலாம். கலிங்கலாறு, நிஷபநதி, தேவியாறு உபவடிநில பகுதிகளில் உள்ள வாசுதேவநல்லூர் வட்டார விவசாயிகள் தென்காசி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை 9443135291, 04633–280160 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

அதிகாரி வேண்டுகோள்

கலிங்கலாறு, நிஷப நதி உபவடி நிலப் பகுதியைச் சேர்ந்த சங்கரன்கோவில் வட்டார விவசாயிகள் நெல்லை வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை 94433 65790, 0462–2552572 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

அனுமன்நதி, கருமேனியாறு உபவடிநிலப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், சேரன்மாதேவி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை 9443153243 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு மானியத்தில் சொட்டுநீர், தெளிப்பு நீர் பாசனம் அமைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க நிதி உதவி கலெக்டர் சி.சமயமூர்த்தி தகவல்**

நெல்லை

விவசாயிகளுக்கு வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க நிதி உதவி வழங்கப்படும் என்று கலெக்டர் சி.சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>வெங்காய சேமிப்பு கிடங்கு</u>

நெல்லை மாவட்டத்தில் வெங்காயம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு 20 மெட்ரிக் டன் வெங்காயத்தை பாதுகாப்பாக சேமிக்க வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க 50 சதவீத மானியத்தில் ரூ. 80 ஆயிரம் நிதி வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. (ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வீதம் 20 மெட்ரிக் டன் கொள்ளளவு கட்டுமானத்திற்கு)

வெங்காய கிடங்கு அமைப்புகள் 5 மெட்ரிக் டன், 10 மெட்ரிக் டன் மற்றும் 20 மெட்ரிக் டன் அளவுகளில் அமைக்கப்படலாம். வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க தோராயமாக ஒரு மெடரிக் டன் அளவுக்கு ரூ 8 ஆயிரம் செலவாகும். அரசு மானியம் ரூ 4 ஆயிரம் வழங்கப்படும். அதிகபட்ச மானியமாக 20 மெட்ரிக் டன் வெங்காய கிடங்கு அமைக்க ரூ. 80 ஆயிரம் வழங்கப்படும்.

<u>விண்ணப்பிக்கலாம்</u>

எனவே வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க விரும்பும் விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, டிராக்டர் வீதி, என்.ஜி.ஓ. ‘ஏ‘ காலனி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி– 627 007 என்ற முகவரிக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0462–2552572, 94433 65790 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு கலெக்டர் சி.சமயமூர்த்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**வேளாண் அபிவிருத்தி திட்டம் மூலம் ரூ.8 லட்சத்தில் மிளகாய் உலர்த்தி இயந்திரம் விவசாயிகளுக்கு, கலெக்டர் அழைப்பு**

நெல்லை

நெல்லை மாவட்டத்தில் மிளகாய் உற்பத்தி செய்யும் விவசாய குழுக்களுக்கு ஒரே நேரத்தில் 750 கிலோ மிளகாய் உலர வைக்கும் உலர்த்திக்கு ரூ.2 லட்சம் வீதம் 4 உலர்த்திக்கு ரூ.8 லட்சம் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. சூரிய சக்தி கூடாரத்தில் உலர்த்தி அமைக்க தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 2013–2014–ம் நிதி ஆண்டிற்கு வேளாண்மை பொறியியல் துறைக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

எனவே சூரிய சக்தி கூடார மிளகாய் உலர்த்தி இயந்திரம் அமைக்க விரும்பும் மிளகாய் உற்பத்தி செய்யும் விவசாய குழுக்கள், உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப்பொறியியல் துறை, என்.ஜி.ஓ. ஏ காலனி பாளையங்கோட்டை என்ற முகவரிக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0462–2552572, 94433 65790 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கலெக்டர் சி.சமயமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.